வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 09.03.2022 புதன்கிழமை | இதழ் : 94 | பக்கங்கள் : 16




## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான
# முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு 25 விசாரணை குழுக்கள் நியமனம்!

கொழும்பு, மார்ச் 09

**காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முறைப்பாடுகளை விரைவில் விசாரணை செய்து முடிப்பதற்கு 25 விசாரணை குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன என்று நீதி அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் 14 ஆயிரத்து 988 முறைபாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை தொடர்பில் முறையான விசாரணை மேற்கொண்டு, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பது உள்ளிட்ட பொறுப்புக்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று 15

## ஜெனிவாவில் 31 நாடுகள் இலங்கைக்கு முழு ஆதரவு
### வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 09

நல்லிணக்கத்துக்கான அரசாங்கத்தின் கணிசமான முயற்சிகளுக்கு உலகில் பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவை வெளிப்படுத்தியதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான மனித உரிமைகள்



ஆணையாளரின் அறிக்கை குறித்து உரை யாற்றிய 45 நாடுகளில் 31 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகப் பேசி 15

## பதிலடி கொடுத்தது வீரவன்ஸவின் கட்சி!
### அமைச்சு பதவியை துறந்தார் ஜயந்த

கொழும்பு, மார்ச் 09

தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜயந்த சமரவீர, தான் வகித்த அமைச்சு பதவியை இராஜினாமா செய்துள்ளார்.இது தொடர்பான பதவி துறப்புக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்று அவர் அனுப்பியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச, அண்மையில் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டார். இந்நிலையிலேயே அவரின் கட்சியை சேர்ந்த - இராஜாங்க 15



## தமிழின அழிப்புக்கு நீதி கேட்டு ஈருருளி அறவழிப் போராட்டம்!

ஜெனிவா, மார்ச் 09

தமிழினப் படுகொலைக்கு சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட ஈருருளிப் பயண அறவழிப் போராட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐ. நா. மனித உரிமைகள் முன்றலை அடைந்தது. இதைத் தொடர்ந்து மறு 15

## காகித தட்டுப்பாடு எதிரொலி பத்திரிகைகள் முடங்கும்நிலை!

யாழ்ப்பாணம், மார்ச் 09

நாட்டில் காகிதங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் பத்திரிகைகள் அச்சிடும் தாளுக்கும் (News print) அதீத பற்றாக்குறை நிலவுகிறது. இதனால், பத்திரிகைகளை அச்சிட்டு வெளியிட முடியாத நிலை உருவாகி வருகின்றது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து டொலருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால், காகிதங்கள் உட்பட பொருட்களின் இறக்குமதி முற் 15

## ஜனாதிபதி - சுதந்திர கட்சி நேற்று சந்தித்துப் பேச்சு!



கொழும்பு, மார்ச் 09

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 15

## கொத்து ரொட்டிக்கு காப்புரிமை பெறுக!
### பாராளுமன்றில் ஒலித்தது குரல்!

கொழும்பு, மார்ச் 09

கொத்து ரொட்டிக்கான காப்புரிமையை இலங்கை பெற வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் நேற்று பாராளுமன்றத்தில் முன்மொழிந்தார்.

இத்தாலியின் பீட்சா, அமெரிக்காவின் 15

## தந்தையால் சித்திரவதை; சிறுமி பொலிஸில் தஞ்சம்!

யாழ்ப்பாணம், மார்ச் 09

தந்தையார் தன்னை சித்திரவதை செய்கின்றார் என்று கூறி சிறுமியொருவர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்துள்ளார்.

12 வயதான சிறுமியே பாடசாலைச் சீருடையுடன் இவ்வாறு அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்துள்ளார்.

ஆவரங்காலை சேர்ந்த குறித்த சிறுமி பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில், 15

## ஏப்ரலில் தேசிய அரசு; பிரதமராவார் ரணில்?

கொழும்பு, மார்ச் 09

ஏப்ரல் புதுவருடத்துக்கு முன்பாக தேசிய அரசாங்கம் ஒன்று உருவாகும் சாத்தியம் உள்ளது.

இவ்வாறு உருவாகும் அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற 15

## கிணற்றில் வீழ்ந்து சிறுமி உயிரிழப்பு

முல்லைத்தீவு, மார்ச் 09

கொய்யாப்பழம் பறிக்க மரத்தில் ஏறிய 14 வயதுச் சிறுமி தவறி கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு, மாங்குளத்தில் உள்ள புதிய கொலனியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. 15

## அழிவுகளுக்கு பொறுப்புக்கூறவே மக்களுக்கு சேவை செய்கிறேன்!
### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

வடமராட்சி, மார்ச் 09

போராட்டத்தின் அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் நானும் ஏதோ ஒரு வகையில் பொறுப்புக்கூற வேண்டும் என்றதனடிப்படையில் அதற்கான தார்மீக பொறுப்பேற்று எமது மக்களின் மீள் எழுச்சிக்கு என்னாலான சேவைகளை தொடர்ந்து செய்துவருகின்றேன்.

இவ்வாறு கூறியிருக்கிறார் கடற்றொழில் அமைச்சரும் ஈ. பி. டி. பி. கட்சியின் பொதுச் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தா.

அத்துடன், 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள் 15

## பயங்கரவாத தடைச் சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசமைப்புக்கு முரண்
### உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 09

பயங்கரவாத தடைச் சட்ட (தற்காலிக ஏற்பாடு) சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தற்காலிக ஏற்பாடான பயங்கரவாதத் தடை சட்டத்தின் திருத்த சட்ட மூலத்தை அண்மையில் முன்வைத்திருந்தது.

இதற்கு எதிராக பல வேறு தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களின் விசாரணை அடிப்படையில் உயர் நீதிமன்றம் தமது வியாக்கியானத்தை சபாநாயகருக்கு அனுப்பி இருந்தது.

இதனை நேற்று சபை யில் வாசித்த 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு நட்சத்திர ஹோட்டல்.

அங்கு தங்கியிருந்த ஒருவர் அறையில் இருந்த தொலைபேசியில், சேவை பெறுவதற்கான இலக்கத்துடன் தொடர்புகொண்டார்.

"றூம் நம்பர் எழுநூற்றி இரண்டில் இருந்து பேசுறன்" என்றார்.

"சொல்லுங்க சேர், என்ன வேணும்" என்றார் மறுமுனையிலிருந்தவர்.

'எனக்கும் என் 'வைவ்'க்கும் (Wife) பெரிய வாக்குவாதமாகப் போய்விட்டது. இப்ப என்னடா என்றால் யன்னல் வழியா குதிக்கப்போகிறேன் என்கிறார்" என்றார் அவர்.

"சேர்.. இது உங்கட பேர்சனல் பிரச்னை. இதுக்கு ஹோட்டல் நிர்வாகம் தலையிடமுடியாது" என்றார் ஹோட்டல் ஊழியர்.

"யோவ்... நீ வேற. யன்னல் கதவை திறக்க முடியயில்லை. சீக்கிரமா ஒரு ஆளை அனுப்பு. அவ மனம் மாறுறதுக்குள்ள..." என்றார் இவர்.

இந்த நகைச்சுவைத் துணுக்குத்தான் இந்தச் செய்தியைப் படித்தபோது ஞாபகம் வந்தது.

அண்மையில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் பங்காளிக் கட்சிகளின் செயல்பாட்டை வன்மையாகக் கண்டித்ததாகவும், அது தொடர்பில் அந்தக் கட்சியின் உயர்மட்டங்கள் இறுக்கமான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியதாகவும் ஒருசெய்தி வெளியாகியிருந்தது.

கூட்டமைப்பு என்பது மூன்று கட்சிகளின் கூட்டணி. அதில் தமிழ் அரசுக் கட்சியும் ஒன்று, அவ்வளவுதான். அந்த மூன்று கட்சிகளும் இணைந்த கூட்டமைப்பில் எந்தக் காலத்திலுமே மூன்று கட்சிகளின் தலைவர்களும் இணைந்து எந்தவொரு முக்கிய பிரச்னைக்கும் தீர்வை எடுத்து அதனை அறிவித்ததாக நாம் காணவில்லை.

ஒன்றில், அதன் தலைவர் என்று அறியப்பட்ட சம்பந்தன் தன்னிச்சையாக முடிவெடுத்து அறிவிப்பார். அல்லது, இன்னுமொருவர் முடிவெடுத்து அறிவிப்பார். அதனை சம்பந்தன் ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்கும். ஆனால், பங்காளிக் கட்சிகள் ஏற்றுக்கொள்கின்றனவா இல்லையா என்பதெல்லாம் அந்த மற்றவருக்கு ஒரு பொருட்டே இல்லை.

பங்காளிக் கட்சிகள் ஒருசில நாட்களுக்கு துள்ளிக் குதிக்கும், பின்னர் பெட்டிப் பாம்பாக அடங்கிவிடும் என்பது அவருக்கு தெரிந்ததுதான்.

கூட்டமைப்பில் அவர் ஒருவர் தன்னிச்சையாக முடிவெடுப்பதில் கட்சிக்கு ஏற்படுத்தும் விளைவுகள் குறித்து, பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மாத்திரமல்ல, தமிழ் அரசின் தலைவரும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுமாக சேர்ந்து சம்பந்தனிடம் பலமுறை முறையிட்டும் எந்தப் பலனும் இதுவரை கிடைத்ததாகவும் தெரியவில்லை.

இந்த இலட்சணத்தில், பங்காளிக் கட்சிகளின் தன்னிச்சையான நடவடிக்கை குறித்து இறுக்கமான நடவடிக்கையை தமிழ் அரசின் உயர்மட்டம் எடுக்கவேண்டும் என்று தமிழ் அரசின் யாழ்ப்பாண மாவட்டக் குழுக்கூட்டத்தில் வலியுறுத்தினார்களாம்.

இறுக்கமான நடவடிக்கை என்றால் என்னவாக இருக்க முடியும்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து அவர்களை வெளியேற்ற வேண்டுமா? அல்லது கூட்டமைப்பு இனி தமிழ் அரசின் சின்னத்தில் போட்டியிட அனுமதிக்க வேண்டாம் என்கிறார்களா?

மூன்று கட்சிக் கூட்டணியில் இரண்டு கட்சிகளை வெளியேற்றினால், நியாயப்படி பார்த்தால் அந்த இரண்டு கட்சிகளும்தான் கூட்டமைப்பாக இயங்கமுடியும். அவர்கள்தான் பின்னர் யார் யாரை எல்லாம் அதில் சேர்க்கலாம் என்பதையும், யார் சின்னத்தில் போட்டியிடுவது என்பதையும் தீர்மானிக்க முடியும்.

இன்றுவரை, கூட்டமைப்பு விடுதலைப் புலிகளால், தமிழ் அரசியலில் ஒற்றுமை கருதி அமைக்கப்பட்ட அரசியல் அமைப்பு என்ற ஓர் ஒற்றைக் கம்பிதான் கூட்டமைப்பைத் தாங்கிப் பிடித்திருக்கின்றது.

அது இல்லையென்றால் கூட்டமைப்பு எப்போதோ காணாமல் போயிருக்கும்.

இந்த நிலையில்தான், பங்காளிக் கட்சிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த தமிழ் அரசின் சில தலைவர்கள் விரும்புகிறார்கள்.

அவர்கள் கூட்டமைப்புக்கு வெளியே இருக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு, இன்று தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை சந்திக்க விரும்புவது தமிழ் அரசுக்கு ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றதா என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

கணவன் மனைவிகளுக்கிடையே அடிக்கடி கருத்து வேறுபாடுகள் வருவதும், பின்னர் யன்னலால் குதிக்கப்போகிறேன் என்று மிரட்டுவதுபோல மிரட்டினாலும், அவர் குதிக்கமாட்டார் என்பது கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ தெரிந்ததுதான்.

அதுபோலத்தான், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் சண்டையும். அவர்கள் வெளியேறினால் கூட்டமைப்பே இல்லாமல் போய்விடும் என்பது தமிழ் அரசுக்கும் தெரியும், இவர்கள் என்னதான் அவமானப்பட்டாலும் வெளியேறமாட்டார்கள் என்பது தமிழ் மக்களுக்கும் தெரியும்.

அடுத்த தேர்தல்வரை இதுபோன்ற சலசலப்புக்கள் இருந்துகொண்டுதான் இருக்கும்.

அதன்பின்னர், தமிழ் மக்கள் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த (அப்படி என்ன முக்கியத்துவம் என்பதை சொல்லவும் மாட்டார்கள்) தேர்தலில் ஒற்றுமையாக வாக்களிக்கவேண்டும் என்ற ஒற்றைக் கோஷத்துடன், இந்த தலைவர்கள் ஒற்றுமையாக வாக்குக் கேட்டு வருவார்கள்.

**- ஊர்க்குருவி**

# மருந்துத் தட்டுப்பாடு மேலும் உச்சமடையும்!

## சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 09

நாடு எதிர்காலத்தில் மருந்து பற்றாக்குறையின் உச்சத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

அடுத்த வருடத்திற்கு தேவையான மருந்துகளுக்கான ஓர்டர்கள் வழங்கப்பட வேண்டும் எனினும் சுகாதார அமைச்சு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை எனச் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் கூறுகையில்,

மருந்துகளை வாங்குதல், விநியோகம் செய்தல், சேமித்து வைப்பது போன்ற பணிகளை இரண்டு மூன்று நாட்களில் செய்ய முடியாது.

கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக நாடு கடுமையான மருந்துப் பற்றாக்குறையை எதிர்கொள்ளவில்லை, ஏனெனில் மக்கள் வழக்கமான நோய்களுக்கான சிகிச்சையைப் பெறுவதைக் குறைத்துக்கொண்டனர்.

எவ்வாறாயினும், தொற்றுநோய் இல்லாவிட்டால், கடந்த ஜனவரி முதல் நாட்டில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும், இது ஒரு எளிய விஷயம் அல்ல.

மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் வேலைநிறுத்தம் செய்யும்போது, தனியார் மருந்தகத்தில் மருந்து வாங்குவதைப் போலவே, நாட்டிலும், அரசு மருத்துவமனைகளிலும் அல்லது தனியார் துறையிலும் மருந்து இருக்காது என்றும் சிலர் நினைக்கலாம்.

மருந்து தட்டுப்பாடு தொடர்பாக தீர்வை வழங்க அதிகாரிகள் தவறிவிட்டனர்.

கடுமையான தொற்றுநோய்கள் தோன்றிய சோமாலியா மற்றும் எத்தியோப்பியா போன்ற மோசமான சூழ்நிலைகளை எதிர்கொண்ட நாடுகளில், உக்ரைனில் மற்றும் பல தடைகள் விதிக்கப்பட்ட போதிலும் வட கொரியாவில் மருந்து தட்டுப்பாடு இல்லை.

நாடுகளுக்கு பல்வேறு தடைகள் இருந்தபோதிலும், தேவையான மருந்து இருப்புக்கள் உரிய நேரத்தில் வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், இலங்கையில் மருந்துப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பான முக்கிய அமைப்பு, மருந்து தட்டுப்பாடு நான்கு முதல் ஆறு வாரங்களுக்குள் நெருக்கடியான நிலையை எட்டும்.

100 மருந்துப் பெட்டிகளை சேமித்து வைத்திருந்த சேமிப்புக் கிடங்குகளில் இப்போது 40க்கும் குறைவாகவே உள்ளது-என்றார். (அ)

# மருத்துவர்கள் வரிசையில் நிற்காமல் எரிபொருளை வாங்கப் பொறிமுறை

## ஜனாதிபதியிடம் கோருகிறது மருத்துவர் சங்கம்

கொழும்பு, மார்ச் 09

வைத்தியர்கள் வரிசையில் நிற்காமல் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் பொறிமுறையை உருவாக்குமாறு அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஜயந்த பண்டாரவினால் ஜனாதிபதி செயலாளருக்கு இந்த கோரிக்கைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில், வைத்தியர்கள் நீண்டநேரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நிற்க வேண்டியிருப்பதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

நிலவும் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் எரிபொருளை பெறுவதில் வைத்தியர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

வைத்தியசாலைகள் வருடத்தில் 365 நாட்களும் இயங்கும் அதே வேளையில் சில வைத்தியர்கள் 24 மணி நேரமும் பணியில் உள்ளனர்.

வைத்தியர்கள் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருக்கும்.

வைத்தியர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வீண்விரயம் செய்ய நேரமில்லை. அது எமது கடமைகளை மேற்கொள்வதற்கு இடையூறாக உள்ளது.

பல வைத்தியர்கள் கடமைக்கு சமூகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது-என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# எரிவாயு கப்பலுக்கு கட்டணம் செலுத்தபட்டது!

கொழும்பு, மார்ச் 09

இலங்கை கடற்பரப்புக்கு வந்த 03 எரிவாயு கப்பல்களில் ஒன்றுக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து முத்துராஜவெல எரிவாயு முனையத்திற்கு எரிவாயு அனுப்பும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எரிவாயு ஏற்றி வந்த மூன்று கப்பல்கள் வத்தளை, உஸ்வெட்டகேயாவ மற்றும் தல்தியவத்தை கடற் பரப்பில் சுமார் ஏழு நாட்களாக நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, தல்தியவத்தை எரிவாயு நிலையத்திலிருந்து முத்துராஜவெல எரிவாயு முனையத்திற்கு 2,500 மெற்றிக் தொன் எரிவாயுவை வெளியேற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# ரூபாயின் பெறுமதி கடுமையான வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 09

இலங்கை மத்திய வங்கியினால் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின்படி ரூபாயின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்க டொலரின் கொள்முதல் விலை 225.20 ரூபாயாகவும் விற்பனை விலை 229.99 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

மேலும் ஸ்டெர்லிங் பவுண்டின் கொள்முதல் விலை 294.06 ரூபாயாகவும் மற்றும் விற்பனை விலை 302.92.ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

அவுஸ்ரேலிய டொலரின் கொள்முதல் விலை 163.74 ஆகவும், விற்பனை விலை 170.15. ரூபாயாகவும் கனேடிய டொலரின் கொள்முதல் விலை 174.73 மற்றும் விற்பனை விலை 180.90 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது. (அ)

# யாழ் மாவட்ட செயலகத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 09

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனைக் கண்காட்சியும் இடம்பெற்றது.

அத்தோடு நேற்றைய மகளிர் தின நிகழ்வில் பிரதேச செயலக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட சில சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான கௌரவமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

ஈழநாடு
Eelanadu
09.03.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# காலாவதியான அரசியல்?

அரசியல் என்பது சாத்தியங்களை கையாளும் கலையென்று ஒரு கூற்றுண்டு. அதாவது, ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்பத்தான் அரசியலை கையாள முடியும். காலம் மாறுகின்றபோது, அரசியல் பேச்சுக்களும், அணுகுமுறைகளும் மாற வேண்டும். பேச்சு வழக்கில் அரைத்த மாவை அரைத்துக் கொண்டிருப்பது என்பார்கள். அரசியல் பேச்சுக்கள் – அணுகுமுறைகள் அவ்வாறிருக்கக்கூடாது.

தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா – கிளிநொச்சியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசுகின்றபோது, எங்களுடைய இளைஞர்கள் எந்த இலட்சியத்திற்காக உயிரை மாய்த்தார்களோ, அந்த இலட்சியத்தை அடையும் வரையில் நாங்கள் ஓயப் போவதில்லை – என்றவாறு மேடையில் உணர்ச்சி வசப்பட்டிருக்கின்றார். ஆயுதப் போராட்ட அமைப்புக்களில் இணைந்து, உயிர்களை மாய்த்தவர்கள், தனிநாட்டு கனவோடு மரித்தவர்கள். அவர்களின் கனவு வெறும் கனவாகவே போய்விட்டது.

மாவை சேனாதிராசா இன்று தலைமை தாங்கும் தமிழ் அரசு கட்சியை உருவாக்கிய – எஸ். ஜே. வி. செல்வநாயகம், தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்த போதும், அதனை அடையும் வழியை அறிந்திருக்கவில்லை. இதுபற்றி கேட்டபோது – நாங்கள் ஒரு நிலைப்பாட்டை வைத்திருக்கின்றோம் – அவர்களே (சிங்களவர்கள்) எங்களை வெளியில் தூக்கியெறிந்து விடுவார்கள் என்றுதான் பதிலளித்தார். ஆனால், அப்படி நடந்ததா?

தனிநாட்டை கோரிய தமிழர் விடுதலைக் கூட்டணியே பின்னர் மாவட்ட சபைக்கு இறங்கிப் போனது. இந்த நிலையில்தான், அதிருப்தியடைந்த இளைஞர்கள் ஆயுதம்தான் அனைத்துக்குமான சர்வலோக நிவாரணியென்னும் முடிவுக்கு வந்தனர். இறுதியில் இந்த நிலைமை இந்தியாவை விரோதித்துக் கொண்டும், தனிநாட்டை அடைய முடியுமென்னும் நிலைக்குள் தமிழர் அரசியலை கொண்டு சேர்ப்பித்தது. இன்று மீண்டும் அதே இந்தியாவின் தயவை நாடித்தான் இன்றைய தமிழ்த் தேசிய அரசியல் சுழன்று கொண்டிருக்கின்றது.

அரசியல் ஒரு காலத்தில் மேடைப் பேச்சுக்களின் மூலம் வளர்ந்தது உண்மை. ஆனால், அந்தக் காலம் முடிந்துவிட்டது. இது – ஒரு போரின் தோல்வியின் பின்னரான காலம். இதனை ஒவ்வொருவரும் மனதில் இருத்திக் கொள்ள வேண்டியது அவசியம். தமிழர்களின் சாத்வீக வழிமுறையும் தோல்வியடைந்திருக்கின்றது – ஆயுத வழிமுறையும் தோல்வி அடைந்திருக்கின்றது. இந்த இரண்டு வழிமுறைகளிலும் தோல்வியடைந்த பின்னர் – அடுத்திருக்கும் வழிமுறை என்ன?

இப்போது தமிழர்களுக்கு முன்னால் இருக்கும் காலமென்பது – கடந்த காலத்தை படிப்பதற்கும், அதிலிருந்து புதிதாக சிந்திப்பதற்கு ஏதாவது எஞ்சியிருக்கின்றதா என்பதை தேடுவதற்கான காலம் மட்டும்தான். சீன தத்துவஞானி கன்பூசியஸின் ஒரு கூற்றுண்டு – “அதாவது, நீ– எதிர் காலத்தை வரையறுக்க விரும்பினால் கடந்த காலத்தை படி”, தனது கடந்த காலத்தை படிக்க மறுக்கும் எந்தவொரு சமூகம் வரலாற்றில் ஒரு போதுமே நிமிர முடியாது. வேண்டுமானால் – நிமிர்வு என்னும் பெயரில் கதைகள் புனைந்து கொண்டிருக்கலாம்.

தமிழ்த் தேசிய கட்சிகள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் – முதலில், காலாவதியான அரசியலிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். இதிலும் ஒரு சிக்கல் உண்டுதான். அதாவது, இன்று அரசியலில் தலைவர்களாக வலம்வருபவர்களில் பெரும்பாலானவர்கள் கடந்த காலத்தின் எச்சங்களாக இருப்பவர்கள். கடந்த காலத்தை நினைத்துக் கொள்வதைத் தவிர – அவர்களால் எதையும் செய்ய முடியாத கையறுநிலையில் இருப்பவர்கள்.

இதன் காரணமாகத்தான், அவர்களுக்கு எப்போதும் கடந்தகால மேடையுணர்ச்சி அரசியல் தேவைப்படுகின்றது போலும். காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. அதன் பாதையில், அது நகர்ந்து கொண்டேயிருக்கும். காலத்தை தங்களின் இச்சைகளுக்கு வளைக்கக்கூடிய வல்லமையுள்ளவர்கள் வளைத்துக் கொள்கின்றனர். வளைக்க முடியாதவர்கள் காலம் தரும் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொண்டு, தம்மைத் தற்காத்துக் கொள்கின்றனர். இரண்டிலும் தோற்பவர்கள் வெறும் கதை சொல்லுபவர்களாக காலத்தில் கரைந்து போகின்றனர். தமிழினம் இதில் எந்த இடத்தில் இருக்கின்றது?

# விக்கியின் ‘அழைப்பாணை’!

அலசுவது இராஜதந்திரி

உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்து இளைப்பாறியவரே முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன். நீதித்துறையில் பணியாற்றிய போது அழைப்பாணைகள் பலவற்றையும் சி. வி. விக்னேஸ்வரன் வழங்கியிருப்பார்.


இருந்தபோதிலும் ஒரு குறுகிய காலத்தில் வடக்கு - கிழக்கு அரசியலில் தனக்கெனத் தனித்துவமான ஓர் இடத்தை கொண்டிருப்பவரே சி. வி. விக்னேஸ்வரன். அத்துடன், அரசியல் பிரவேசம் செய்த நாள் முதல் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக சி. வி. விக்னேஸ்வரன் துணிச்சலான கருத்துகள் பலவற்றை வெளியிட்டு வருகின்றார். இந்த நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமையை வலியுறுத்தியுள்ள தமிழ் மக்கள் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் சமஷ்டி முறையில் தமிழ் மக்களுக்கான தீர்வொன்றை பெறக்கூடிய அரசியல் யாப்பொன்றை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பைக் கோரியுள்ளார்.

சமஷ்டி என்ற சொற்பதம் இலங்கையைப் பொறுத்தவரை தமிழர்களுக்கான அரசியல் தீர்வை நோக்கியதாக முதலில் சிங்கள தலைவர்களாலேயே முன்வைக்கப்பட்டது. ஆனால், அன்று சமஷ்டி கோரிக்கையை கொழும்பை மையமாகக்கொண்டு இயங்கிய பிரபுத்துவ போக்கை கொண்டிருந்த தமிழ் அரசியல்வாதிகள் நிராகரித்திருந்தனர்.

இதற்கு காரணம் வடக்கு - கிழக்கில் அரசியல் ஆளுமை கொண்டோர் சமஷ்டி முறையிலான நிர்வாக கட்டமைப்பின் கீழ் உருவாகும்போது பிராந்திய ரீதியாகத் தமது முக்கியத்துவங்கள் குறைவடைந்துவிடும் என்று அவர்கள் எண்ணியிருந்தனர். இதுதவிர, சிங்கள அரசியல் தலைவர்களே சமஷ்டி அடிப்படையிலான தீர்வு திட்டமொன்றை தமிழர்களுக்கு வழங்க முன்வந்திருந்த நிலையில், அச்சமயம் தமிழ் - சிங்கள இனத்தவரிடையே பரஸ்பர புரிந்துணர்வு காணப்பட்டதோடு இன ரீதியிலான வேற்றுமைகள் பெரிதும் முறுக்கேறியிருக்கவில்லை.

இலங்கையின் சுதந்திரத்துக்கு அன்று தமிழ் தலைவர்கள் பெரிதும் பங்களிப்பை வழங்கிய நிலையில் அவர்கள்மீதான நல்லபிமானம் சிங்களத் தலைவர்கள் மத்தியில் பெரிதும் காணப்பட்டிருந்தது. ஆயினும், இந்த உயர்வான பரஸ்பர மதிப்பளிக்கும் நிலை இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே மாற்றம் கண்டு தற்போது தமிழ் - சிங்கள இனங்களிடையே மிக மோசமான வேறுபாடுகளை தோற்றுவித்துள்ளது.

நல்லாட்சி, நல்லிணக்கம் என்பதெல்லாம் பெயரளவிலேயே இருப்பதைக்காண முடிகின்றது. முப்பது வருட கால யுத்தத்தில் ஏற்பட்ட அழிவுகள், அனர்த்தங்கள் தந்த படிப்பினைகளின் அடிப்படையில்கூட வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய



தீர்வுத்திட்டமொன்று கொண்டுவரப்படாதிருக்கின்ற தருணத்திலேயே தமிழ் மக்கள் கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் சமஷ்டி முறைமையை கொண்டு வருவதற்கான அரசியலமைப்பை உருவாக்க அழுத்தம் கொடுப்பதற்கு ஒற்றுமையாக இயங்க முன்வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை வெறுமனே ஓர் அழைப்பு என்று குறிப்பிடுவதைவிட ஓர் அழைப்பாணை என்றே கருத முடியும். ஏனெனில், பேரினவாத ஆட்சியாளர்கள் எமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற பின்நிற்கின்ற அதேசமயம் எம்மவர்களிடையே நிலவுகின்ற ஒற்றுமையீனமும் எமது அரசியல் ரீதியான எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற தடையாக இருக்கின்றது.

இந்த ஒற்றுமையீனம் என்பது மிதவாத அரசியல் தலைவர்களிடையே மட்டுமல்ல. தீவிரவாத ஆயுதப் போராளிகள் மத்தியில் நிலவியதே வடக்கு - கிழக்கு தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு சாபக்கேடாக அமைந்திருந்தது. இதனை நன்குணர்ந்த நிலையிலேயே தமிழ் மக்கள் கூட்டணி தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் சமஷ்டி முறையுடன்கூடிய அரசியலமைப்பொன்றை ஏற்படுத்த அழுத்தம் கொடுப்பதற்கு ஒற்றுமையுடன் செயல்படவேண்டியதன் தேவையை வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பொறுத்தவரை கடந்த காலங்களில் தமிழர் அரசியல் தரப்பில் காணப்பட்ட தவறுகள் திருத்தப்படவேண்டியதன் அவசியத்தையும் சி. வி. விக்னேஸ்வரனின் “அழைப்பாணை“ வலியுறுத்தி நிற்கின்றது.

வடக்கு - கிழக்கு தமிழர்களை அரசியல் ரீதியாக நன்கு பந்தாடுவதற்கு அவர்களிடையே காணப்படுகின்ற ஒற்றுமையீனம் நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளதை தென்னிலங்கை அரசியல் வட்டாரம் நன்கறிந்து வைத்துள்ள நிலையில் தமிழ் மக்கள் கூட்டணி தலைவர் சி. வி. விக்னேஸ்வரனின் ஒற்றுமைக்கான அழைப்பை கருத்தில் கொள்ளும் பட்சத்திலேயே ஆக்கபூர்வமான தீர்வுகளை எதிர்பார்க்க முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

எதையும் மிகுந்த கவனத்துடன் செய்து பலன் அடைவீர்கள். பழைய நண்பர்களை சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். கணவருக்கு உதவி செய்து பாராட்டு பெறுவீர்கள்.

**இடபம்**

கடந்த சில நாட்களாக இருந்து வந்த மன உளைச்சல் தீரும். என்றைக்கோ உழைத்த பலனை இன்று பெற்று மகிழ்வீர்கள். கடன் பாக்கி வசூலாகும். மனஅழுத்தம் நீங்கும்.

**மிதுனம்**

பயணத்திட்டம் ஒன்றை தீட்டுவீர்கள். பிறருக்கு ஆலோசனை சொல்வீர்கள். மனம்விட்டு பேசி பிரச்னைக்குத் தீர்வு காண்பீர்கள். நெருக்கமான ஒருவருக்குத் தேவையானவற்றை வாங்குவீர்கள்.

**கடகம்**

வருமானம் வரும். தேவையற்ற பயம் வேண்டாம். மனைவிக்கும், மகளுக்கும் ஆபரணங்கள் வாங்கி கொடுத்து மகிழ்விப்பீர்கள். தந்தையின் செயல் ஒன்று உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

**சிம்மம்**

ஆன்மிக நாட்டம் கூடும். வேண்டுதலை நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள் மேலிடத்தின் பாராட்டுதலை பெறுவார்கள். செலவைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பதில் முயற்சி செய்வீர்கள்.

**கன்னி**

திருமணம் பற்றிய முயற்சியில் அவசரம் காட்ட வேண்டாம். பிறரை அனுசரித்து செல்வதுதான் உங்கள் முன்னேற்றத்திற்கு நல்லது. வேலைப்பளு இருந்தாலும் சகஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**துலாம்**

எதிர்காலம் பற்றிய முனைப்பான சிந்தனை இன்று மேலோங்கும். கணவன் மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். காதலர்கள் இடையே இருந்து வந்த சிறு சண்டை நீங்கும்.

**விருட்சிகம்**

உறவினர் இடையே இருந்த பிரச்னை தீரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெற்றோருக்குப் பணம் வரும். பிறரை புரிந்து கொள்வீர்கள். திட்டமிட்டிருந்த விஷயம் ஒன்று எதிர்ப்புக்கு நிறைவேறும்.

**தனுசு**

நீங்கள் உண்மையாகச் செய்த செயல்கள் நன்மை தரும். மற்றவர்கள் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் சிறிய மனவருத்தங்கள் வந்து போகும்

**மகரம்**

மகன், மகள் மூலம் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். குழந்தைகளின் மூலம் எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். உறவுகளால் நன்மை உண்டு: தந்தையின் உடல்நலம் மேம்படும்.

**கும்பம்**

பொழுதுபோக்குகளில் ஆர்வம் ஏற்படும். பணிகளில் கவனம் தேவை. உடல்நலனில் கவனம் தேவை. எதிலும் அலட்சியம் காட்ட வேண்டாம். உங்கள் தகுதிக்கு ஏற்ற வேலை கிடைக்கும். மகிழ்ச்சி கூடும்.

**மீனம்**

குடும்பத்திற்காக செலவுகள் செய்து அவர்களது அன்பை பெறுவீர்கள். தீயோரிடம் இருந்து விலகி நிம்மதி அடைவீர்கள். நல்ல மனம் கொண்ட உறவினர்களால் சந்தோஷம் கூடும்.

# மேகதாது அணை விவகாரத்தை கையாள அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டுக

## தமிழக முதலமைச்சரை வலியுறுத்தும் ஓபிஎஸ்

சென்னை, பெப் 09

மேகதாது அணை கட்டப்படும் என்ற கர்நாடக அரசின் கோரிக்கையை நிராகரிக்க மத்திய அரசை வலியுறுத்தி, தமிழக முதல்வர் தமிழக சட்டப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவும், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டவும் வேண்டு மென்று அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

"காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு முற்றிலும் முரணான வகையில், இது குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், கர்நாடக மாநிலத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் மேகதாது அணைத் திட்டத்தை செயல் படுத்துவோம் என்று தொடர்ந்து பேசிக் கொண்டு வருகின்ற சூழ்நிலையில், கர்நாடக மாநில முதல்வர் செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

கர்நாடக மாநில முதல்வர், மேகதாது உள்ளிட்ட நீர்ப் பகிர்வு திட்டங்கள் குறித்து விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்படும் என்றும், இது குறித்து கர்நாடக சட்டப்பேரவையில் விவாதிக்கப்படும் என்றும், இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்குமாறு மத்திய நீர்வளத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்ளப் போவதாகவும், இதனை செயல்படுத்துவதற்கான அனைத்து சட்ட வாய்ப்புகளையும் ஆராய்வோம் என்றும் கூறியிருக்கிறார்.

எனவே,தமிழக முதல்வர் இதில் உடனடியாகத் தலையிட்டு, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டவும், மேகதாது அணை கட்டப்படும் என்ற கர்நாடக அரசின் கோரிக்கையை நிராகரிக்க மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் ஒரு தீர் மானத்தை நிறைவேற்றவும், பேச்சுவார்த்தை என்ற பேச் சுக்கே இடமில்லை என்பதை அழுத்தந்திருத்தமாக தெளிவு படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

# உக்ரைன் படையில் கோவை இளைஞர் கல்வி கற்க சென்று துப்பாக்கி ஏந்தினார்

## குடும்பத்தினரிடம் புலனாய்வு துறை விசாரணை



சென்னை, பெப் 09

கல்வி கற்பதற்காக உக்ரைனுக்கு சென்றிருந்த கோவையைச் சேர்ந்த இளைஞர், அந்நாட்டு இராணுவத்தில் இணைந்து பணியாற்றி வருவது தெரியவந்துள்ளது.

யுத்தம் ஆரம்பமாகியதையடுத்து உக்ரைன் இராணுவத்தில் இணைந்து பணியாற்ற விருப்பம் உள்ள மக்கள் நாட்டின் பாதுகாப்புக்காக இணைந்து பணியாற்றலாம் என அந்நாடு அறிவித்தது.

இதையடுத்து ஏராளமானோர் அந்நாட்டின் இராணுவத்துக்கு உட்பட்ட துணை இராணுவப் படைகளில் இணைந்து பணியாற்றி வருகின்றனர். தமிழகத்தின், கோவையை சேர்ந்த சாய்நிகேஷ் என்ற இளைஞரும் உக்ரைன் துணை இராணுவத்தில் இணைந்து பணியாற்றி வருவது தெரியவந்துள்ளது.

மாணவர் சாய்நிகேஷ் உக்ரைன் நாட்டின் கார்கோ பல்கலைக்கழகத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு முதல் படித்து வருகிறார். தற்போது அவர் 4ஆம் ஆண்டு படித்து வருகிறார். இச்சூழலில் அந்நாட்டு அரசின் கோரிக்கையை ஏற்று, உக்ரைன் இராணுவத்தின் துணை இராணுவப் படையான ஜார்ஜியன் நேஷனல் லிஜியன் என்ற துணை இராணுவப்படையில் இருந்து பணியாற்றி வருகிறார்.

இதையறிந்த மத்திய, மாநில உளவுத்துறையினர் கோவையில் உள்ள அவரது குடும்பத்தினரிடம் இது தொடர்பாக விசாரித்து உள்ளனர். உக்ரைனில் உள்ள அவர் தனது குடும்பத்தினரிடம் தொடர்ந்து செல் போனில் பேசி வந்துள்ளார். இது தொடர்பாகவும் உளவுத் துறையினர் விசாரித்து உள்ளனர்.

# பரபரப்பான சூழ்நிலையில் அ.தி.மு.கவின் பொதுக்குழு மார்ச் இறுதியில் கூடுகிறது

சென்னை, பெப் 09

சசிகலாவை கட்சியில் சேர்க்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் அ.தி.மு.கவின் பொதுக் குழு கூட்டம் இம்மாத இறுதி யில் நடைபெற உள்ளது.

சசிகலா இல்லாததாலும் தான் அதிமுகவுக்கு பெரிய தோல்வி ஏற்படுவதாக ஒரு பிரிவினர் கூறி வருகின்றனர்.

இதனால், ஒற்றை தலைமைக்காக அ.தி.மு.கவில் சசிகலாவை இணைக்க வேண்டும் என்று குரல் அவ்வப்போது எழுகிறது. இந்த நிலையில், ஓபிஎஸ் பங்கேற்ற தேனி மாவட்ட அதிமுக நிர்வாகிகள் கூட்டத்தில் சசிகலா, தினகரனை கட்சியில் இணைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதிமுகவில் இணைவது குறித்து சசிகலா, தினகரன் தொடர்ந்து அறிக்கை வெளியிடுவது, செய்தியாளர்களை சந்திப்பது, ஓபிஎஸ், இபிஎஸ் தங்கள் ஆதரவாளர்களுடன் தொடர் ஆலோசனை போன்ற நடவடிக்கைகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

தேனி மாவட்ட அதிமுக நிறைவேற்றிய தீர்மானத்தை இந்த பொதுக்குழுவில் ஓபிஎஸ் சமர்ப்பிக்க உள்ளதாக கூறப்படுகிறது. சசிகலா தொடர்பாக இந்த பொதுக் குழுவில் முக்கிய முடிவு எடுக்கப்பட உள்ளதாக மூத்த நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# உடல்நலக் குறைவினால்தான் ஜெயலலிதா மரணமடைந்தார்

## சிலர் இதனை அரசியலாக்குகின்றனர் என்கிறார் தினகரன்

ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணையை ஆறுமுகசாமி தலைமையிலான ஆணையம் மீண்டும் தொடங்கியுள்ள நிலையில், உடல்நலக் குறைவினால் தான் அவர் மரணமடைந்தார் என டிடிவி தினகரன் கூறினார்,

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "ஜெயலலிதாவின் மரணம் அரசியலாக்கப்பட்டுள்ளது. எந்த முடிவாக இருந்தாலும் ஜெயலலிதாவே எடுத்திருப்பார்.

தேவையில்லாமல் எங்கள் சித்தி மீது பழிபோட்டு எதோ பண்ணிப் பார்த்தார்கள். அது நடக்கவில்லை. இதனால் மக்கள் வரிப்பணம் தான் வீணாகியுள்ளது. நாடாளுமன்ற தேர்தலுக்கான வேலைகளில் இறங்கியுள்ளோம். முதற்கட்டமாக வரும் 18 ஆம் திகதி முதல், கட்சி பொறுப்பாளர்கள் தமிழகம் முழுவதும் சென்று கட்சியை பலப்படுத்தும் பணியில் ஈடுபட உள்ளனர்" எனத் தெரிவித்தார்.

## வாழ்வு தரும் வார்த்தை



தவக்காலத்திலே நம் கண்முன்னும் நம் கருத்திலும் என்றும் இருக்க வேண்டியது கிறிஸ்துவும் அவருடைய பாடுகள், மரணம் உயிர்ப்புமாகும் என்பதை இன்றைய நற்செய்தி எமக்கு வலியுறுத்துகின்றது. நாம் ஒன்றை நம்ப வேண்டும் என்றால் அல்லது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால் நமக்கு தேவை அறிகுறிகள், புதுமைகள், சாட்சியங்கள் இவை அனைத்தும் நம்மை கிறிஸ்துவிடம் விட்டு செல்ல வேண்டும். ஏனெனில் கிறிஸ்து ஒருவரே அவரது உயிர் தரும் வார்த்தைகளே நமக்கு வழியும் வாழ்வுமாயிருக்க வேண்டும்.

வெறும் அக்குறிகளையும் தேடித் திரிபவர்கள் "பொல்லார் தலை முறையினர் (மத்தேயு: 9.41) இயேசுவில் விசுவாசமில்லாத சீர்கெட்ட தலைமுறையினர் (மத்:9.41) இயேசுவில் விசுவாசம் கொண்டிருப்போர் அறிகுறிகளைத் தேடமாட்டார்கள். எனவே இயேசுவில் ஆழமான விசுவாசம் கொள்வோம். இத்தவக்காலத்தில் நம் விசுவாசத்தை ஆழப்படுத்த ஆண்டவரே விசுவாசிக்கிறேன் என் விசுவாசமின்மையை நீக்க உதவி செய்யும் என்று வேண்டுவோம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா**

# இலங்கையில் நீடிக்கும் இராணுவ மயமாக்கல்!

## பிரிட்டன் அரசு கவலை



**ஜெனிவா, மார்ச் 09**

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையை வரவேற்பதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.**

மேலும் பொறுப்புக்கூறலில் தொடர்ந்து முன்னேற்றம் இல்லாதது மற்றும் மனித உரிமை வழக்குகளில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளமை குறித்தும் அது கவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை சிவில் சமூகத்தின் கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல் மற்றும் இராணுவ மயமாக்கல் குறித்தும் கவலையடைவதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரிட்டனின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரீட்டா பிரெஞ்ச் தெரிவித்துள்ளார்.

அத்தோடு வடக்கு - கிழக்கில் காணி அபகரிப்பு மற்றும் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்னை குறித்து கவலையடைவதாகவும் அவர் கூறினார்.

ஆகவே 46/1 தீர்மானத்தில் உள்ள பரிந்துரைகளுடன் ஆக்கபூர்வமாக ஈடுபடுமாறும் அவர் இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார். (அ)

## ஜெய்சங்கர்-பஸில் ராஜபக்ஷ தொலைபேசி உரையாடல்

*கொழும்பு, மார்ச் 09*

இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் மற்றும் இலங்கை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் தொலைபேசியில் உரையாடியுள்ளனர்.

இந்நிலையில், சுமுகமான கலந்துரையாடல் பலனளித்ததாக இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு அனைத்து வழிகளிலும் முழுமையான ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

மேலும், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்த மாத நடுப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக இந்திய தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## மகளிர் தினத்தை புறக்கணித்து கிளிநொச்சியில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்!

*கிளிநொச்சி, மார்ச் 09*

சர்வதேச மகளிர் தினத்தை புறக்கணித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

இந்த போராட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்துக்கு முன்பாக இடம்பெற்றது.




இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணமல் போன தமது உறவுகளின் புகைப்படங்கள் மற்றும் பதாதைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பி எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (அ)

## கனகாம்பிகைக்குளம் பாடசாலைக்கு இளம் அதிபரை நியமித்து தாருங்கள்

### பெற்றோர் கையெழுத்து போராட்டம்

*கிளிநொச்சி, மார்ச் 09*

கிளிநொச்சி கனகாம்பிகைகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இளம் அதிபரை நியமித்து தாருங்கள் என தெரிவித்து பெற்றோர் கையெழுத்து போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

இந்த போராட்டம் நேற்று காலை 7.30 மணியளவில் பாடசாலை பிரதான வாயிலில் முன்னெடுக்கப்பட்டது. பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த கையெழுத்து பெறும் போராட்டத்தில் தமது பாடசாலைக்கு இளம் அதிபர் ஒருவர் நியமித்து தருமாறு தெரிவித்து பெற்றோர் ஒப்பமிட்டனர்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் அந்த பாடசாலையில் இருந்த வளர்ச்சி தற்பொழுது இல்லாது போயுள்ளது. மாணவர் தொகையும் படிப்படியாக குறைந்துள்ளது. 1500 மாணவர்கள் வரை கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மாணவர் தொகை இன்று 250 பேராக குறைவடைந்துள்ளது. கடந்த வருடம் முதலாம் ஆண்டுக்கான ஆட்சேர்ப்பில் 2 மாணவர்கள் மாத்திரமே இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

அவ்வளவு தூரம் பாடசாலையின் வளர்ச்சி குன்றியுள்ளது. பாடசாலைக்கு கடந்த ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஓய்வுநிலைக்கு குறுகிய காலத்தை கொண்டவர்களாகவே நியமிக்கப்பட்டனர். அவர்களின் ஓய்வு காலத்துக்குள் குறித்த பாடசாலையை வளர்ச்சி பாதைக்குள் கொண்டு செல்ல முடியாது. யுத்தத்துக்கு முன்னர் மிளிர்ந்த எமது பாடச ாலை இன்று வளர்ச்சி பாதையை விட்டு கீழ் இறங்கி உள்ளது. இதற்கு கார ணம் கல்வி அதிகாரிகள். அவர் கள் எமது பாடசாலையின் வளர்ச்சியை பற்றி சிந்திப் பதில்லை. தற்பொழுதும் நியமிக்கப்பட்டுள்ள அதிபர் ஓய்வு காலத்துக்கு குறுகிய காலப்பகுதியை கொண்டவராக இருக்கின்றார்.

எமது பாடசாலையை கடந்த காலங்களை போன்று வளர்ச்சி பாதையில் கொண்டு செல்வதற்கு இளம் துடிப்புள்ள அதிபரை நியமித்து தாருங்கள். அதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள், கிராம மட்ட அமைப்புக்களாக நாங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

அதற்காகவே இந்த கையெழுத்துகள் பெறப்பட்டு வட மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்க உள்ளோம். எமது பாடசாலையின் நிலை தொடர்பில் வடக்கு மகாண ஆளுநர், அமைச்சின் செயலாளர் ஆகியோர் நேரடி கள ஆய்வை மேற்கொள்ளவேணடும். வளர்ச்சி பாதை குன்றியமைக்கான காரணத்தை கண்டறியவேண்டும். அதற்கான கால அவகாசத்தை தந்து கலந்துரையாடல் ஒன்றின் ஊடாக பாடசாலை அபிவிருத்தி தொடர்பில் ஆராய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்விடயம் தொடர்பில் பல்வேறுபட்ட தரப்பினருக்கு எழுத்து மூலமான கடிதங்களையும் அனுப்பியுள்ள போதிலும் திருப்தியான பதில் கிடைக்கவில்லை-என்றனர். (அ)



## மக்களுக்கு நியாயமானதை வழங்க ராஜபக்ஷக்களால் மட்டுமே முடியும்

### கூறுகிறார் இந்திக அனுருத்த

*கொழும்பு, மார்ச் 09*

"நாட்டு மக்களுக்கு நியாயமானதை வழங்கவும், அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும் ராஜபக்சக்களால் மாத்திரமே முடியும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் மாத்திரமே பிரச்னைகளுக்குப் பதில் சொல்ல முடியும்."

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்களின் உண்மையான பிரச்னையை அடையாளம் கண்டு உண்மையான பிரச்னைக்குப் பதிலளிக்கும் அரசியல் பிரமுகர்கள் இந்த நாட்டில் மிகக் குறைவு.

அவ்வாறு உண்மையான பிரச்னைக்குத் தீர்வைக் காணக்கூடிய அரசியல் பிரமுகர் ஒருவர் இருப்பாராயின் அது பிர



தமர் மஹிந்த ராஜபக்ஷ ஒருவரேயாவார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் மக்களுக்கு நியாயமானதை வழங்குபவர்கள் தற்போதைய பிரதமர் உட்பட இந்த ராஜபக்ஷர்களே தவிர வேறு யாரும் இல்லை என்பதை இந்த நாட்டு மக்களுக்கு நாம் பொறுப்புடன் கூறுகின்றோம். மக்களின் கோரிக்கைகளை சரியாக நிறைவேற்றுபவர்கள் இந்த ராஜபக்சர்களே-என்றார். (அ)

# மின்வெட்டுக் காலத்தை குறைக்க விசேட திட்டம்

கொழும்பு, மார்ச் 09

நாட்டில் கணிசமான மழை பெய்யும் வரை மின்வெட்டு காலத்தை குறைப்பதற்கான விசேட திட்டமொன்றை மின் சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அமைச்சரவையில் முன்வைத்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் நெருக்கடி எதிர்வரும் வியாழக்கிழமையுடன் முடிவுக்கு வரும் என எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய, மாத்தறை மற்றும் சப்புகஸ்கந்த ஆகிய இடங்களில் இயங்காத மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான உலை எண்ணெயை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட அதேவேளை, மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடிகள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை உடனடியாகப் பயன்படுத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், சட்டரீதியான தடைகள் உள்ளிட்ட தடைகள் நீக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

மின்வெட்டு காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ள அதேவேளை, பொருளாதாரம் தொடர்பில் கவலைகள் எழுந்துள்ளதாக அமைச்சர் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

எரிபொருளைப் பெறுவதற்காக வரிசையில் நிற்க வேண்டிய நிலை, மின்வெட்டு மற்றும் மின்வெட்டு தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகள் போன்றவற்றால் பொதுமக்கள் சிரமத்துக்கு உள்ளாகியிருப்பதற்கு அரசாங்கம் வருந்துவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நாடு பாரிய நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்த அமைச்சர் அழகப்பெரும, இது ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதி அல்லது அமைச்சரின் பிரச்னையல்ல என்றும், வெளிநாட்டு கையிருப்பு நெருக்கடியின் விளைவு என்றும் கூறினார்.

எரிபொருளைப் பெறுவதற்கு மட்டும் நாட்டிற்கு சுமார் 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக அமைச்சர் கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நீதி வழங்கப்படவில்லை என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்த கருத்து தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோது, அரசாங்கம் அடிப்படை உரிமைகளை மதிக்கின்றது எனவும், இதில் சந்தேகம் எதுவும் தேவையில்லை எனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 45 நாடுகள் தொடர்பில் 31 நாடுகள் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் இலங்கை அடைந்துள்ள சாதகமான முன்னேற்றங்களைப் பாராட்டியுள்ளன.

15 வருடங்களுக்கு முன்னர் சுமார் 14,000 இலங்கையர்கள் காணாமல்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்கியுள்ள அதேவேளை, அத்தகைய முறைப்பாடுகளுக்கு அரசாங்கம் நிரந்தர தீர்வை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே மனித உரிமைகள் பேரவையில் உள்ளவர்கள் இத்தகைய முயற்சிகளை பாராட்டவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (அ)

# எரிபொருள் இறக்குமதி செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி

## அமைச்சர் காமினி லொக்குகே தகவல்

கொழும்பு, மார்ச் 09

**மின் உற்பத்திக்கான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.**

நேற்று முன் தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்தபோதே அவர், இதனைக் குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன் தினம் அமைச்சரவை கூட்டம் இடம்பெற்றது.

எனினும் இதில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கலந்து கொள்ளவில்லை.

அவர் இதற்கு முன்னர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி, தாம் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில் ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டதன் பின்னர் நேற்று முன்தினம் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. (அ)



# நானாட்டான் பஸ்ஸில் முதியவரிடம் பணத்தை பறித்த நபர் மடக்கி பிடிப்பு

மன்னார், மார்ச் 09

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்ற அரச பஸ்ஸில் பயணம் செய்த முதியவரிடம் இருந்து சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பணத்தை நானாட்டான் பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்து பறித்துச் சென்ற இளைஞர் ஒருவரை அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மடக்கிப் பிடித்தனர்.

வவுனியா மனிக்பாம் பகுதியில் வசிக்கும் முதியவர் ஒருவர் மன்னார் எழுத்தூர் பகுதியில் வசிக்கும் மகளிடம் இருந்து பணத்தை பெற்றுக் கொண்டு கொழும்பு பஸ் மூலம் வவுனியாவுக்கு பஸ்ஸில் பயணித்துள்ளார்.

அதே நேரம் அந்த பஸ்ஸில் திருகோணமலையைச் சேர்ந்த 22 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் முதியவரின் அருகிலிருந்து பயணித்துள்ளார்.

பஸ் நானாட்டான் பிரதேச பஸ் தரிப்பு நிலையத்தை சென்றடைந்து பயணிகளை ஏற்றுவதற்காக நிறுத்தியபோது குறித்த முதியவர் வைத்திருந்த பணத்தை இளைஞர் பறித்துக் கொண்டு பஸ்ஸில் இருந்து பாய்ந்து ஓடியுள்ளார். இந்த நிலையில் முதியவரின் கூச்சலை கண்ட அப்பகுதியில் இருந்த இளைஞர்கள் குறித்த திருடனை துரத்திச் சென்று பணத்தோடு மடக்கிப் பிடித்தனர். உடனடியாக முருங்கன் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த முருங்கன் பொலிஸாரிடம் பணத்தை திருடிய இளைஞரை இளைஞர்கள் ஒப்படைத்தனர். (அ)

# ஜனாதிபதி தலைமையில் பொருளாதாரப் பேரவை

## நியமிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 09

ஜனாதிபதி தலைமையில் 11 பேர் கொண்ட பொருளாதார பேரவையை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், குறித்த பொருளாதார பேரவையை வாராந்தம் கூட்டுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

பெருநிலைப் பொருளாதாரக் கொள்கை, கோவிட் - 19 பெருந்தொற்று நிலைமையின் பின்னர் தேசிய பொருளாதாரத்தின் செயற்பாடு, பொருளாதார மீள்கட்டமைத்தல், அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை மற்றும் நிதிக் கொள்கைகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் உள்ளிட்ட பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக மிகவும் ஆழமாகக் கலந்துரையாடி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பேரவையின் ஆலோசனைகள், வழிகாட்டல்களுக்கமைய ஏற்புடைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் தேவையான சந்தர்ப்பங்களில், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இயைபுடைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும், தேவைக்கேற்ப பொருளாதாரப் பேரவைக் கூட்டத்திற்கு போதுமான துறைசார் அறிவுகொண்ட கல்வியியலாளர்களை அழைக்கவும், ஜனாதிபதியினால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் படிமுறைகள் தொடர்பாக அமைச்சரவையின் உடன்பாட்டை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொருளாதார பேரவையின் கட்டமைப்பு ஜனாதிபதி, பிரதமர், வர்த்தக அமைச்சர், நெடுஞ்சாலைகள் அமைச்சர், நிதி அமைச்சர், விவசாய அமைச்சர், பெருந்தோட்டத்துறை அமைச்சர், மத்திய வங்கி ஆளுநர், ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரி செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ஆகியோரின் அடிப்படையில் அமையவுள்ளது. (அ)





# கிளிநொச்சி செயலகத்திலும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 09

யாழ். பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின நிகழ்வு மாவட்ட செயலக தொழில் பயிற்சி நிலைய மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாவட்டத்தில் சாதனை பெண்களாக பிரகாசிக்கும் பெண்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து கண்காட்சியும் இடம்பெற்றது. (அ)

# அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் பண்டாரவளையில் தீப்பந்த போராட்டம்!

பண்டாரவளை மாநகரில், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, ஐக்கிய மக்கள் சக்தியினரால் பாரியளவிலான தீப்பந்தப் போராட்டம் நேற்று முன்தினம் இரவு 7 மணியிலிருந்து 10 மணி வரை நடத்தப்பட்டது.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் ஆண்களும், பெண்களுமாகப் பெருந்திரளானோர் தீப்பந்தங்களுடன் பங்கேற்றனர். பண்டாரவளை மாநகர சபை மைதானத்திலிருந்து, புறப்பட்ட போராட்டக்காரர்கள் பேரணியாக பண்டாரவளை மாநகரை அடைந்து அதன் சுற்று வட்டாரத்தில் சுமார் மூன்று மணி நேரமாக எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் வாகனப் போக்குவரத்தும் சுமார் மூன்று மணி நேரம் தடைப்பட்டு, வாகன நெரிசல்களும் ஏற்பட்டன.

மின் துண்டிப்பு நெருக்கடி, எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடுகள், அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு கள் ஆகியவற்றைக் கண்டித்தே இந்தத் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

## அருந்ததியின் மாற்று மோதிரம் பிரமாண்டமான

# BRIDAL FASHION SHOW ! யாழ் மண்ணில்

2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை திருமண த்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்றவொறு தனியிட த்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.

அருந்ததியின் மாற்றுமோதிரம் என்றாலே எதிர்பார்ப்பு சற்று அதிகம் தான். காரணம் அழகுக்கலை நிபுணர்களை கௌரவிக்கும் அரங்காகவும் அவர்களின் திறமைக்கு அங்கீகாரம் வழங்கும் மேடையாகவும் அருந்ததியின் மாற்று மோதிரம் மணப்பெண் அலங்காரகாட்சி நிகழ்வு அமைகின்றது.

50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் Aari Work அனுசரணையாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

அந்த வகையில் 2022 கடந்த ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மிகப் பிரம்மாண்டமாக இம் மாற்றுமோதிரம் நிகழ்வு நடைபெற்றது. மாண்புமிகு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பாரியார் மற்றும் இலங் கையின் முதல் பெண்மணி சிரந்தி ராஜபக்ஷ அவர்கள் இவ் விழாவிற்கு சிறப்பு அதிதியாக வருகை தந்து சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சிறப்பு நிகழ்வானது ஒவ் வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமூதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமி ட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் மணப்பெண் அலங்காரக் காட்சி மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண செல்வா பெலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் நிச்சயம் இந் நிகழ்வு திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை..



THIVARSHANA BEAUTY ACADEMY PVT LTD | ADHISHAYAA BRIDAL STUDIO | GOLDEN LOOK BEAUTY CARE & ACADEMY | MATHUMI BEAUTY CARE | DREAM STYLE BEAUTY PARLOUR | RAMI BEAUTY CARE | SHAKSI BEAUTY CARE

DEVSHA HAIR AND BEAUTY SALON | D BEAUTY CARE | YABEZ BEAUTY CARE | PRINCEEZ BRIDAL ARTIST | GOLDEN NILA HAIR & BEAUTY SALON | STYLIST BEAUTY PARLOUR | SHREE KOSHI BEAUTY PALACE

EVANGELINE BEAUTY CARE (BRIDAL) | FASHION BEAUTY CORNER | GAZI'S BEAUTY & BOTIQUE | JO BEAUTY CARE | KOKI BEAUTY CENTER | J BEAUTY CARE | SHIVU HAIR & BEAUTY

GOWSY BEAUTY FASHION | HARSHI BEAUTY PARK | PB BEAUTY PARLOUR | NEW LOOK BEAUTY PARLOUR | MTM BEAUTY PARLOUR | Leththu Beauty Care & Academy | VIUME BRIDAL BEAUTY CARE

THARSHA BEAUTY SALON | ACKSTHI BEAUTY PARLOR | SUN GLOW | SALON DIYA PVT LTD | SALON LENA | SANLIN BEAUTY CARE | ROYAL LOOKS STYLEONE BEAUTY CARE




CHANDRA'S BEAUTY PARLOUR | RAAM BEAUTY INTERNATIONAL TRAINING CENTREA'S BEAUTY PARLOUR

**யாழில் நடைபெறவிருக்கும் பிரம்மாண்ட மணப்பெண் அலங்காரக் காட்சிக்காக எம்மோடு இணைந்திருங்கள்!**

**2022 மார்ச் 10 செல்வா பெலஸ்**

**திருமண மண்டபத்தில்**




# யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுயாதீன சினிமாவை கொண்டாடுதல்

கிருபாலினி பாக்கியநாதன்

## யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா இன்று ஆரம்பம்

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுயாதீன சினிமாவினைக் கொண்டாடுதல்" எனும் நோக்கத்தோடு யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா கொண்டாடப்பட்டு வருகிறது. 2014ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் கொண்டாடப்படும் அவ் விழாவானது தற்போது அதன் ஏழாவது ஆண்டினை எட்டியுள்ளது.

இன்று முதல் 14ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ள திரையிடல்களோடு இவ் விழா கொண்டாடப்படவுள்ளது. கொவிட் -19 பெருந்தொற்றுப் பரவலின் காரணமாக, 2021ஆம் ஆண்டில் கொண்டாடப்படாது பிற்போடப்பட்ட அவ்வாண்டுக்கான திரைப்பட விழாவே இவ்வாண்டில் கட்டம் கட்டமாகப் பிரித்துக் கொண்டாடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

2021ஆம் ஆண்டிற்கான முதலாம் கட்டத் திரையிடல்கள் கடந்த தை மாத இறுதியில் கண்டி வீதியிலுள்ள ஜேர்மன் கோத்தே கலாசார நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கும் பண்பாடுகளின் சந்திப்பு வெளியாகிய 'கலத்தில்' இடம்பெற்றிருந்தன. அதன் தொடர்ச்சியாக, இரண்டாம் கட்டத் திரையிடல்களும், நிகழ்வுகளுமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தற்பொழுது இடம்பெறவுள்ளன. இறுதியாக, விழாவின் இறுதிக் காட்சியும் விருது வழங்கல் நிகழ்வும் 14ஆம் திகதி மாலை 5மணியளவில் யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்திலுள்ள றீகல் சினிமாவில் இடம்பெறும்.

வழமைபோல இத்திரைப்பட விழாவானது 'அஜென்டா 14' எனும் இலாப நோக்கற்ற திரைப்படத்துறை சார்ந்த அமைப்பின் ஒழுங்குபடுத்தலின் கீழ் பல வெளிநாட்டுத் தூதரகங்கள், கலாசார பண்பாட்டு நிறுவனங்கள், சிலோன் தியேட்டர்ஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை மற்றும் அதன் திரைப்படச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையோடு நடைபெறுகிறது.

இதற்கு முன்னைய காலங்களில், இவ் விழாவின் திரைப்படக் காட்சிகள் மற்றும் நிகழ்வுகள் அனைத்தும் யாழ்ப்பாணப் பொதுசன நூலக கேட்போர் கூடம், சமகாலக் கலைக் கட்டடக்கலை வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகம், பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் அமெரிக்கத் தகவல் கூடம் (American Corner) ஆகியவற்றில் இடம்பெறுவது வழக்கம். ஆனால் பெருந்தொற்றின் கட்டுப்பாடுகள் காரணமாக இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட இடங்களிலேயே காட்சிகள் இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திரைப்பட விழாவில் பல விருதுகளை வென்ற வெவ்வேறு மொழித் திரைப்படங்கள், ஆவணத் திரைப்படங்கள், விருதுக்காகப் போட்டியிடும் சர்வதேச மற்றும் இலங்கைக் குறுந்திரைப்படங்கள், அறிமுகத் திரைப்படங்கள் என்பன ஆங்கில உபதலைப்புக்களுடன் திரையிடப்படுவது வழக்கம். அவ்வாறே இவ்வருடமும் 18 காட்சித் திரைப்படங்கள், 7அறிமுகத் திரைப்படங்களோடு சர்வதேச மற்றும் தேசிய மட்டத்திலிருந்து சிறந்த குறுந் திரைப்பட விருதுக்காகப் போட்டியிடும் ஆர்மேனியா, கஸகஸ்தான், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், போர்த்துக்கல், பங்களாதேசம், இந்தியா, ரஷ்யா, கம்போடியா ஆகிய நாடுகளைச் சார்ந்த 14 சர்வதேசக் குறுந்திரைப்படங்களும், அத்துடன் இலங்கையைச் சேர்ந்த 14 குறுந்திரைப்படங்களும் திரையிடப்படவுள்ளன. இத்திரைப்படக் காட்சிகள் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் கைலா சபதி கலையரங்கில் தினமும் காலை 10 மணி, மதியம் 1.15 மற்றும் மாலை 4.45 என மூன்று காட்சிகளாக இடம்பெறவுள் ளன. திரை இரசிகர்கள் இத்திரைப்படக் காட்சிகள் அனைத்தையும் இலவசமாகப் பார்வையிடலாம் என விழாக்குழு தெரிவித்துள்ளது.

"சமூகங்கள் தமது எல்லைகளைத் தாண்டி ஒருவர் மற்றவருடன் இடைவினை புரிவதற்கான ஒரு வெளியை இச் சினிமா விழா உருவாக்கும் எனத் தான் நம்புவதாக அவ்விழாவின் பணிப்பாளராகிய அனோமா ராஜகருண தெரிவித்திருக்கிறார். அதற்கிணங்க அவ் விழாவில் காட்சிப்படுத்தப்படும் திரைப்படங்கள் அனைத்தும் எவ்வாறு தேசம், மொழி எனும் எல்லைகளைக் கடந்து அவரவர் பண்பாடுகளைப் புரிந்து கொள்ளவும், ரசிக்கவும் வைக்கின்றனவோ, அவ்வாறே பல திரைப்படக் கலைஞர்களை ஒன்றிணைக்கும் வெளியாகவும் இத்திரைப்பட விழா அமைகின்றது.

இளையவர்களின் முயற்சிகளுக்கு வாய்ப்பளித்தல், பார்வையாளர்களுக்கு எம்மவர்களின் முயற்சிகளைப் பரீட்சயப்படுத்துதல், அவற்றிற்கான அங்கீகாரம் வழங்குதல் எனும் நோக்கங்களின் அடிப்படையில் ஆண்டுதோறும் 'தேசிய சிறந்த குறுந்திரைப்பட விருது' எனும் ஒரு விருது வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பார்வையாளர்களினது விருப்புத் தெரிவினடிப்படையில் 'பார்வையாளர் விருது' எனும் இன்னொரு விருதும் வழங்கப்படுவதோடு 'சர்வதேச சிறந்த குறுந்திரைப்பட விருது', 'சிறந்த அறிமுகத் திரைப்பட விருது' ஆகிய விருதுகளும் வழங்கப்படுகின்றன.

திரைப்பட விழாவின் ஓர் அங்கமாக மிகத்தேர்ச்சி பெற்ற திரைப்படத் துறைசார் விற்பன்னர்களின் வகுப்புகள் ஒழுங்குப்படுத்தப்படுவது வழக்கம். அவ்வகுப்புக்கள் என்றும் திரைப்படத்துறை சார்ந்து இயங்குபவர்களுக்கும் அத்துறையில் ஈடுபட ஆர்வமுடையோருக்கும் தொழிநுட்பம் மற்றும் தயாரிப்புச் சார்ந்த அறிவினை வழங்குவதையும் திரைப்படத்துறைசார் திறனை வளப்படுத்தலையும் இலக்காகக் கொண்டவை. அதனடிப்படையில் வர்ணச் செம்மைப்படுத்துனரான டினிந்து ஜாகொட என்பவரின் 'நவீன சினிமா நிலவுருவில் வர்ணத் தொனி நிலைப்படுத்தல்' எனும் தலைப்பில் ஒரு வகுப்பு

Jaffna
INTERNATIONAL
CINEMA FESTIVAL

எதிர்வரும் 14ஆம் திகதியன்று 'கலம்' நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. அவ்வகுப்புகளில் சினிமாத் துறை சார்ந்த ஆர்வமுடையவர்கள் எவரும் பங்குபற்றலாம் என்றும் அதற்காகக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் நண்பகல் 1.15க்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'மௌனத்துடன் போராடுதல்: உரையாடலுக்கான திரைப்படம்' எனும் தலைப்பில் திரைப்பட விழாவின் பணிப்பாளராகிய அனோமா ராஜகருணாவால் தொகுத்து வழங்கப்படும் குழுக் கலந்துரையாடல் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து 'சினிமாப் பைத்தியம்: யாழ்ப்பாணத்தில் சினிமாத் தியேட்டர்கள் மற்றும் பார்வைத்துவம் 1930-2000' எனும் தலைப்பிலான உரையொன்றும் இடம்பெறவுள்ளது. அவ்வுரையானது, கடந்த மூன்று வருடங்களாகத் திரைப்பட விழாவின் ஓர் அங்கமாக நடைபெற்ற 'என்றும் பசுமையான வெள்ளித் திரை' எனும் தலைப்பில் யுத்தத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த சினிமாத் தியேட்டர்களின் ஞாபகங்களை மீட்பதாக நடைபெற்ற ஞாபக நடை என்ற நிகழ்வோடு தொடர்பட்டது என்ற விடயமும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழாவில் திரைத்துறை சார்ந்த சாதனையாளர்களைக் கௌரவிப்பதென்ற விடயம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எமது திரைத்துறையில் மிகக் காத்திரமான பங்காற்றியவர்களை இன, மத, மொழி பேதம் கடந்து அடையாளப்படுத்துவதோடு மட்டுமல்லாது சினிமாவுக்காக அங்கீகரிக்கப்பட்ட இச் சினிமாத் திருவிழா எனும் பொதுவெளியில் அவர்களுக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' எனும் விருதினை வழங்கிக் கௌரவித்தலை யும் முக்கிய நிகழ்வாகக் கொண்டு விழா கொண்டாடப் படுகிறது.

இதுவரை இடம்பெற்ற திரைப்பட விழாக்களில் இலங்கையின் திரைப்படத்துறையில் வெவ்வேறு தளத்தில் முக்கிய பங்காற்றிய ஆளுமைகளான அத்தனாஸ் யேசுராசா, தர்மசேன பத்திராஜ, கா.பொ.கா பாலசிங்கம், சுவர்ணா மல்லவராச்சி, கைலாயர் செல்லநைனார் சிவகுமாரன், வைரமுத்து வாமதேவன் ஆகியோருக்கு இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் அந்த விருது யாழ்ப்பா ணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரைப்பட இயக்குநர் ஜோதேவ் ஆன்ந்தா அவர்களுக்கும் திரைப்பட விமர்சகர் மற்றும் திரைப்பட இதழ் ஆசிரியரான ஆதர். யூ. அமரசேன அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

கொவிட் பெருந்தொற்றுப் பரவல் காரணமாகப் பல நாடுகளில் திரைப் பட விழாக்கள் ஒத்திவைக்கப்பட்டு அல்லது நிறுத்தப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் திரைப்பட விழாவை ஒரு சர்வதேச விழாவாக அதன் ஏற்பாட் டுக் குழுவினர் தொடர்ந்து நடாத்தி வருகின்றமை பாராட்டிற்குரியது. சர்வதேச ரீதியாக நடைபெறும் திரைப்பட விழாக்கள் அது நடைபெறும் நகரங்களின் அதிநவீன பண்பாட்டு அடையாளங்களாகியுள்ளதோடு அங்குள்ள உல்லாசப் பிரயாணத் துறையின் வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றியுள்ளன. அதனால் அங்கு திரைப்படங்களைப் பார்க்க வருவதோடு மட்டுமல்லாமல் விழாவை ஏற்பாடு செய்வதிலும் திரை இரசிகர்கள் தமது பங்களிப்புகளைச் செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் திரைப்பட விழா ஆரம்பித்த காலப்பகுதியில் இந் நிகழ்வு எம்மவர்க்கு புதிய ஒன்றாகவே காணப்பட்டது. அன்று உள்ளூர்த் திரைப்படத் துறை அவ்வளவாக வளர்ச்சி பெற்றிருக்கவில்லை ஆனால் கடந்த 7வருடங்களில் பல குறுந்திரைப்படங்களையும், முழு நீளத் திரைப்படங்களையும் தயாரிக்கும் அளவுக்குக் கலைஞர்கள் வளர்ந்துள்ளனர். எமது திரைத்துறையும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. பொதுவாக இவ்விழாக்கள் இளம் கலைஞர்களுக்குப் பயிற்சியையும் பார்வையாளருக்கு சிறந்த சினிமாப் படைப்புகளையும் மற்றும் அது தொடர்பான பரீட்சியத்தையும் வழங்குவதற்கான அரிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. இருந்தும் இது போன்ற நிகழ்வில் எமது திரைத்துறை சார்ந்தவர்களின் பங்களிப்பும், பங்குபற்றுதலும் குறைவாகவே காணப்படுகின்றது. அதற்கு இங்கு முழுநேரத் தொழில்வாண்மை சார்ந்த திரைத்துறை இன்னும் உருவாகாமையும் ஒரு காரணமாக இருக்கலாம்.

முழு நேரமாகச் செயற்படுபவர்கள் தவிர்ந்து பகுதி நேரமாக மற்றும் பொழுது போக்காகத் திரைத்துறையில் தொழிற்படுபவர்களும் இதனை ஒரு வாய்ப்பாகக் கருத வேண்டும் என்பது எனது கருத்து. அவர்களும் திரைப்படங்களைப் பார்வையிட, கலந்துரையாட, தம்மை வளப்படுத்த, விவாதிக்க, துறை சார்ந்த விடயங்களைக் கற்க, பார்வையாளர்களைப் புரிந்துகொள்ள, தமது பார்வையைப் பகிர்ந்துகொள்ள, சினிமாவைக் கொண்டாட அடிப்படையான ஒரு நிகழ்வு இதுவென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். சினிமாவினூடாக ஒரு சமூக மாற்றம் என்ற விடயத்தை விரும்பும் எவரும் தவறவிடக்கூடாத ஒரு விழா இதுவென்பது குறிப்பிடத்தக்கது. ■



**எரிக்கின்ற எண்ணெயையும், எரிகின்ற காலத்தையும் பொறுத்து, வேண்டத் தகாத கரி, திரியில் சேர்ந்து கொண்டு ஒளிகுறைந்து மங்கி அணைந்து போகாமலிருக்க, இரும்புக்குச்சி கொண்டு கரியகற்றி விடுவதுபோல, மாணவர்களும் சோர்வுற்று சோபிக்காமல் இருப்பதற்கு, காலத்திற்கு காலம் அவர்கள் உற்சாகமூட்டப்படவேண்டும்.**

சிவ பரிமேலழகர்

# அடுத்த தலைமுறை உருவாக்கத்தில் மாணவர்களுக்கு அவசியமாகும் உள்ளுந்துசக்தி

இலங்கை காலனித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்னரான காலப்பகுதியில் இருந்த இலங்கைத் தமிழரின் வாழ்வியல் தரமானது, சுதந்திர இலங்கையில் தமிழருக்கெதிரான திட்டமிட்ட அரசியல் நகர்வுகளான புதிய குடியேற்றங்கள், மொழிக்கொள்கைகள், கல்வியில் தரப்படுத்தல் , பல்கலைக்கழக அனுமதியில் கட்டுப்பாடுகள், வேலைவாய்ப்பில் பின்னடைவு போன்ற இன்னோரன்ன கெடுபிடிகளினால் தமிழர் சமூகம் பின்னடைவைச் சந்தித்தது.

இந்நிலையை நிவர்த்திசெய்ய எடுக்கப்பட்ட அரசியல் நகர்வுகளும் ஒப்பந்தங்களும் பலனளிக்காமையினால், சாத்வீக போராட்டங்களைத் தொடர்ந்து முப்பது வருட ஆயதப் போராட்டமும் அதன் முடிவும், தமிழ் மக்கள் நொந்து நொடிந்த நிலையில், சிதறுண்டு சிறுசிறு குழுக்களாக பிரிந்து, பல தசாப்தங்கள் அவர்கள் பின்தள்ளப்பட்டு விட்டார்கள்.

என்னதான் புலம்பெயர் சமூகம் பிரயத்தனப்பட்டாலும், அடிமட்டத்தில் தள்ளப்பட்டுள்ள சமூகத்தை கைதூக்கி விடுவது இலகுவான காரியமல்ல. இன்று தாயகமண்ணில் வாழ்கின்ற மக்கள் திடமான மனவுறுதியுடனும் நம்பிக்கையுடனும் உதவிக்கரங்களைப் பற்றிப்படித்து, மேலெழ இடைவிடாது உழைப்பதைத் தவிர வேறுமாற்று வழிகள் இருப்பதாக தெரியவில்லை.

**இன்றைய விதைநெல் மணிகள் நாளைய பெரும்போக விளைச்சல்**

காலாதிகாலமாக கமக்காரர்கள், நெற்பயிர்ச் செய்கைக்கு நல்ல நெல்மணிகளை தெரிவுசெய்து, நாற்றுமேடைகளை சிறந்த முறையில் உருவாக்கி, சரியான பருவத்தில் உழுது பண்படுத்திய வயல்களில், இயற்கையின் உதவியுடன் நாற்றுநட்டு, தேவையான அளவு நீர் பாச்சி வளர்த்தெடுத்து, கதிர்முற்றிக் கனத்தவுடன் அறுவடைசெய்து, வைக்கோலும் பதரும் நீக்கி, காயவைத்து அடுத்த போகத்திற்கான சிறந்த நெல்ம ணிகளை பாதுகாப்பாக பேணி வைத்துக் கொண்டு, எஞ்சியதை தமக்கும் சமூகத்தினருக்கும் உணவுக்காக பகிர்ந்து கொள்கின்றனர்.

வித்தில்லா சம்பிரதாயம் மேலும் இல்லை கீழுமில்லை. வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான். உடற்பசியைப் போக்க உதவும் உணவிற்கே இவ்வளவு சம்பிரதாயங்கள் இருக்கின்றன என்றால், ஒரு தனித்துவமான பாரம்பரியத்தையும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையும் கொண்ட ஓரினத்தின் தலைமுறையினரின் வழிநடத்தலுக்கு கொடுக்கப் பட வேண்டிய கரிசனையையும், முக்கியத்துவத்தையும், எவ்வளவு சிரத்தையுடன் முன்னெடுக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளமுடியும்.

**கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்**

திரும்பிப் பார்த்து எத்தனை காலம் கடந்து விட்டது என்று, கணக்கிட்டு உறுதியாக சொல்லமுடியாத முந்தைய எமது மூதாதையர் காலத்தில், கோவில்கள் மட்டும்தான் இருந்தன. அங்கு எல்லோருக்கும் பொதுவான கடவுளை, இறைவனாக உருவகப்படுத்தி, தெய்வங்களாக காட்சிப் படுதினர். குழப்பம் இருக்கவில்லை. கூட்டாக அமைதி இருந்தது. ஆன்மீகம் இருந்தது. குருகுலக் கல்வி இருந்தது. தொல்காப்பியம், திருக்குறள், அகநானூறு, புறநானூறு, மேலும் சங்க இலக்கியங்கள் இலக்கணவரம்புக்குள் பூத்துக் குலுங்கின.

மிக உன்னதமான பக்திப் பிரவாகமாக பன்னிருதிருமுறைகள் மனித வாழ்வின் தாத்பரியத்தையும், அர்த்தத்தினையும் பறைசாற்றின. மக்களுக்கு தமக்கென தனித்துவமான அடையாளங்கள் இருந்தன. அது வீரம் செறிந்த மக்களுக்கு, தன்மானத்தையும் உயரிய சிந்தனைத் திறத்தினையும் வழங்கியிருந்தது. காலப்போக்கில் மனிதப் பரம்பலால், படையெடுப்புகளால் அந்நிய மத, மொழி, வாழ்க்கை முறைகள், வற்புறுத்தி திணிக்கப்பட்டன. இங்குதான் வாழ்க்கைப் போராட்டங்கள் பல வடிவங்களில் உருப்பெற்றன.

மாற்றம் ஒன்றே மாறாதது, மாற்றத்தை உள்வாங்கி மாறாதிருப்பதும், மாறாக, மாற்றத்தை புறந்தள்ளி எதிர் வினையாற்றுதலின் வெற்றி தோல்வி நிகழ் காலத்திலிருந்து, எதிர் காலத்தை நிர்ணயிக்கின்றன.

**கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்**

மிக வேகமாகன பரிணாமவளர்ச்சி ஒருபுறம், கட்டுப்படுத்தமுடியாத தேய்மானம் ஒருபுறமாக, மனிதரை பாதிக்கின்ற விடயங்கள் நாலாபக்கமும் தொடர்ச்சியாக சூழந்து கொண்டே இருந்து வருகிறது. கடந்தகாலம் நிகழ்காலத்தை நிர்ணயம் செய்ததுபோல, நிகழ்காலம் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொண்டிருக்கின்றது. நிகழ்காலம் கூர்ந்து கவனித்து, நேர்சீர் சமன்செய்யாவிடின், தன்னிச்சையான மாற்றங்கள் முற்றுமுழுதான அழிவைத் தனதாக்கிக் கொள்ளும். கடந்தகாலக் குழந்தைகள், சிறுவர்கள், வாலிபர் - யுவதிகள் இன்றைய இளைய தலைமுறையினர், இளம் பெற்றோர்கள். இன்றைய சிறுவர்கள், வாலிபர்- யுவதிகள் நாளைய இளையவர்கள், பெற்றோர்கள். ஒட்டுமொத்த சமுதாயமுமாகும்.

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பது அனுபவ வாக்கு. கடந்த காலத் தியாகங்களும் அர்பணிப்புகளும் அர்த்தமுள்ளவையாக பரிணமிக்க, இன்றைய தலைமுறைச் சமுதாயம் காத்திரமான, கடினமான, கண்டிப்பான தூரநோக்குள்ள திட்டமிடலுடன், தீர்க்கமான செயல்வடிவங்கள் உருப்பெற உழைக்கவேண்டும். மாற்று வழிகள் எதுவும் தென்படவில்லை. ஒரேஒரு நேர் வழி, பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும்தான். இருள் சூழந்த இடத்தில் ஓர் அகல்விளக்கு எப்படி ஒளிபரப்பி இருளகற்றி, சூழவுள்ளவர்களின் மனதில் நம்பிக்கையெனும் உணர்வினை நிரப்புகிறதோ அதுபோல, கல்வியை விதைக்கின்ற விளை நிலங்களான பள்ளிக்கூடங்களும், பல்கலைக்கழகங்களும் வருங்காலத்தை நிர்ணயிக்கப் போகின்ற தற்போதய இளம் தலைமுறையினரின் மனங்களை பண்படுத்தி புடம் போட்டு சிறந்த குடிமக்களாக வார்த்தெடுப்பதன் மூலமே நம்மூதாதயர் நம்மிடம் கையளித்தது அடுத்தடுத்த தலைமுறையினரை சென்றடைவதை உறுதிசெய்ய முடியும்.

கல்விக்கூடங்கள் அனைத்தும் பல முகப்புக்களைக்கொண்ட அகல் விளக்குகளாகவும் , அங்கு பணியாற்றும் அதிபர் முதல் ஆசிரியர், பெற்றோர் ஈறாக அனைத்து சேவையாளர்களும் அதி உன்னத எண்ணெய்ச் சக்தியாகவும், கல்விபயிலும் மாணவச் செல்வங்கள் நன்றாக முறுக்கப்பட்ட அழுக்கற்ற திரிகளாகவும் உருவகப்படுத்தப்பட்டால், அங்கு வழங்கப்படுகின்ற கல்விச்சேவையானது குருவிடமிருந்து மாணாக்கர்களுக்கு மடைமாற்றப்படும். தீச்சுவாலைகளாக உருப்பெற்று ஒவ்வொரு மாணவமணிகளும் ஒளிர்விட்டு பிரகாசிப்பார்கள்.

எரிக்கின்ற எண்ணெயையும், எரிகின்ற காலத்தையும் பொறுத்து, வேண்டத் தகாத கரி, திரியில் சேர்ந்து கொண்டு ஒளிகுறைந்து மங்கி அணைந்து போகாமலிருக்க, இரும்புக்குச்சி கொண்டு கரியகற்றி விடுவதுபோல, மாணவர்களும் சோர்வுற்று சோபிக்காமல் இருப்பதற்கு, காலத்திற்கு காலம் அவர்கள் உற்சாக மூட்டப்படவேண்டும். அவர்களது உள்ளத்தில் உள்ளுந்து சக்தியாக உத்வேகத்தை ஏற்படுத்தக் கூடிய பேச்சாளர்களின் உரைகளை அவர்கள் கேட்பதன் மூலமும், தமது ஐயங்களை கேள்விகளின் மூலம் தெளிவுபடுத்திக் கொள்வதன் மூலமும், திடமான திண்ணிய மனத்தினராய், பொறுப்புள்ள ஒரு புதிய சமூகத்தினரை உருவாக்கி, எதிர்காலத்தை கையளித்து, நமது தலைமுறையில் சாதிக்க முடியாமல் போனவற்றைக்கூட, மிகவும் துணிச்ச லுடனும் இலாவகமாகவும், சகலவித மான இடர்களையும் தகர்த்தெறிந்து, வெற்றிகொள்ள வழிசமைக்க வேண் டியது எம் எல்லோரினதும் பொறுப் பாகும்.

இன்றைய ஒட்டுமொத்த கல்விச் சமூகம்தான் ஒரே நம்பிக்கை நட்சத்திரங்கள். அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என சகலரினதும் ஒத்துழைப்பும் எதிர்காலத்தை நோக்கிய தீர்க்கதரிசனமான சமூகப் பார்வையும், குறித்த இலக்கை நோக்கிய இடைவிடாத பயணமும் இன்றியமையாத்தாகும். கல்விச் சமூகதினரிடையே உத்வேகத்தை ஏற்படுத்தவும், மாணவர் மனங்களில் உள்ளுந்துசக்தியாகிய ஒளியை ஏற்றி வைத்து இடைவிடாத அவாவுடன் கூடிய உழைப்பினை உறுதிசெய்ய உற்சாக மூட்டும் பேச்சாளர்களும் அவர்தம் பேச்சுகளும் மிகுந்த பலன்தரும் என்பது உலகறிந்த உண்மை. இந்த விதத்தில் புலம்பெயர் உறவுகள் சிலவற்றில் முனைகிறார்கள். இப் புலம்பெயர் உறவுகளின் நற்சிந்தனைகள் முழுமையான பலனளிக்கவேண்டும் என்பது சகலரினதும் எதிர்பார்பாகும்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

- இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. 'தன்னிறைவான ஒரு நாட்டில் சூரியனும் சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஒன்றுகூடட்டும்' என்னும் ஒட்டுமொத்தக் கருத்தை வெளிப்படுத்துவது இலங்கையின்.
    (1) தேசியக் கொடி (2) தேசிய கீதம் (3) தேசிய இலச்சினை

31. ஒரு குறிப்பிட்ட காலத்திலன்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவரங்களை **மாத்திரம்** கொண்ட விடை.
    (1) தென்னை, வாழை, செவ்வரத்தை
    (2) செவ்வரத்தை, இறப்பர், மா
    (3) வேம்பு, தேக்கு, இறப்பர்

32. உடல், உள சுகத்திற்கான செயற்பாடுகளில் "மனவுறுதி" (திடசித்தம்) எத்தனையாம் படிமுறையாகும்?
    (1) மூன்றாம் (2) நான்காம் (3) ஐந்தாம்

33. தேசியக் கொடியில் உள்ள செம்மஞ்சள் நிறப்பட்டி குறிப்பது.
    (1) முஸ்லிம்களை (2) தமிழர்களை (3) சிங்களவர்களை

34. இலங்கையின் தேசியக் குறியீடுகளில் இரண்டு.
    (1) காட்டுக் கோழியும், நிறைகுடமும்
    (2) நீலோற்பலமும், நாகமரமும்
    (3) தர்மச்சக்கரமும், அரச இலையும்

35. 'மிஹிந்து ஊர்வலம்' பின்வரும் எச்சமயத்தவர்களுடன் தொடர்புடையது?
    (1) பௌத்தர்கள் (2) இந்துக்கள் (3) கிறிஸ்தவர்கள்

36. செவ்வெறும்புகளின் கூடு காணப்படத்தக்க ஒரு மரம்,
    (1) தென்னை (2) கமுகு (3) வேம்பு

37. ஔடத பானம் தயாரிக்கப் பயன்படும் பூக்கள்,
    (1) கறிவேப்பிலை, செவ்வரத்தை
    (2) அகத்தி, சாத்தாவாரி
    (3) பொன்னாவரை, வில்வம்

38. தனிப்பட்ட வகையில் ஒருவர் பயன்படுத்த வேண்டிய பொருள்களில் இரண்டு.
    (1) பேனை, குடை (2) பற்தூரிகை, சீப்பு (3) சீப்பு, குடை

39. குறித்த வேளையில் உணவை உண்ணாமல் இருப்பதால் ஏற்படத்தக்க ஒரு நோய்.
    (1) உயர்குருதி அமுக்கம் (2) இரைப்பையழற்சி (3) நீரிழிவு

40. உடலுக்குச் சக்தியைத் தரும் உணவு.
    (1) வல்லாரை (2) இறைச்சி (3) உருளைக்கிழங்கு

41. ஈக்கள் மொய்த்த உணவுகளை உண்பதால் ஏற்படத்தக்க நோய்.
    (1) கழிச்சல் (2) நீர்வெறுப்பு (3) மலேரியா

42. பின்வரும் பிராணிகளுள் ஊர்வன **அல்லாதது.**
    (1) தவளை (2) உடும்பு (3) ஆமை

43. 
    படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பின்வரும் எதனைச் செய்வதற்கு மிகப் பொருத்தமானது?
    (1) திருகு ஆணியைச் சுழற்றுவதற்கு
    (2) மரப்பலகையில் துளையிடுவதற்கு
    (3) தகட்டினை வெட்டுவதற்கு

44. பின்வருவனவற்றுள் இலங்கையின் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.
    (1) கரப்பந்தாட்டம் (2) வலைப்பந்தாட்டம் (3) சடுகுடு

45. பயணத்திற்காகப் பாதையைப் பயன்படுத்தும் போது நாம் செய்யக் **கூடாதது.**
    (1) கூட்டமாகச் சேர்ந்து உரையாடியபடி பயணித்தல்
    (2) நடந்து செல்கையில் பாதையின் வலது புறத்தைப் பயன்படுத்துதல்.
    (3) பாதையைப் பரிசீலிக்காது பாதைக்கு ஓடிச் செல்வதைத் தவிர்த்தல்.

46. 
    பாடசாலையில் தயாரிக்கப்பட்ட கூட்டெருப் பாத்திரம் அருகே தரப்பட்டுள்ளது. இப்பாத்திரத்தினுள் இடக்கூடிய கழிவுப் பொருட்களில் இரண்டு.
    (1) யோகட் கோப்பை, பொலிதீன் உறை
    (2) கடதாசித்துண்டுகள், இலைகுழைகள்
    (3) இலைகுழைகள், கண்ணாடித்துண்டுகள்

## விடைகள்

30. (3) 31.(1) 32. (1) 33. (2) 34. (2) 35. (1) 36. (3)
37. (3) 38. (2) 39. (2) 40. (3) 41.(1) 42. (1) 43. (2)
44. (3) 45. (1) 46. (2)

---

CHANNEL-1

**02.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

CHANNEL - 2

**02.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# விபுலானந்த அழகியல் கற்கைகளில் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை

மட்டக்களப்பு, மார்ச் 09

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இசைத் துறையினர் சத்குரு ஸ்ரீ தியாக ராஜ சுவாமிகள் ஆராதனை நேற்று முன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்றது.

சுவாமி விபுலானந்த அழகி யல் கற்கைகள் நிறுவகத்தின் இராசதுரை அரங்கில் இசைத் துறைத் தலைவர் கலாநிதி நிர்ம லேஸ்வரி பிரசாந்த் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப் பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி கலந்துகொண் டார். ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி பிரபு பிரேமானந்தா ஜீ மகராஜ் கலந்து சிறப்பித்திருந்தார்.

சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளைத் தொடர்ந்து பஞ்சரத்தின ஆராதனையும், இசை ஆராதனையும் இடம் பெற்றன.

இந்நிகழ்வுகளில் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலா னந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் விரிவுரையாளர் கள், கலைஞர்கள் மற்றும் மாண வர்கள் எனப் பெருமளவிலா னோர் பங்குபற்றியிருந்தனர். (ஐ)

# பல்கலையை திறக்கக்கோரி மாணவர்கள் போராட்டம்!

அக்கரைப்பற்று, மார்ச் 09

**பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, தென்கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு முன்னால் தீப்பந்தம் மற்றும் சுலோகங்களை ஏந்திய வாறு மாணவர்கள், நேற்றுமுன்தினம் இரவு போராட்டத்தில் ஈடுபட்ட னர்.**

சேர் ஜோன் கொத்த லாவலை பல்கலைக்கழ கத்தை தனியார் மயப் படுத்தல் மற்றும் புதிய மாணவர் அனுமதி போன்ற விடயங்களை முன் வைத்தும், பல்கலைக்கழகத்தை திறக்கு மாறும் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குகொள்வதற்காக பஸ்க ளில் வந்திறங்கிய பெருமளவு மாணவர்கள் போராட்டத் தில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)





# நிழல்பட பிரதி இயந்திரம் பாடசாலைக்கு அன்பளிப்பு

அக்கரைப்பற்று, மார்ச் 09

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் பாடவிதான அபி விருத்தி மற்றும் பரீட்சை பிரிவுக்காக பெறுமதிமிக்க நிழல்பட பிரதி செய்யும் இயந்திரம் கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கு அமை வாக தொழில் அதிபர் ஒருவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

அதிபர் ஏ.பி. முஜீன் தலைமையில் கல்லூரி வளாகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பிரபல தொழிலதிபரும், ஏ. எஸ். ஆர். எம். உரிமையாளருமான எம். எம். முஸாதிக் நிழல்படபிரதி செய்யும் இயந்திரத்தைக் கையளித்தார்.

இதன்போது பிரதி அதிபர்களான எம். இக்பால், எஸ். எம். எம். ஜாபீர், பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் பொறியியலாளர் என்.ரி.எம். சிறாஜுதீன் உள்ளிட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர் கள் கலந்துகொண்டனர். (ஐ)

# வெள்ளரிப் பழ விற்பனை அம்பாறையில் அதிகரிப்பு

அக்கரைப்பற்று, மார்ச் 09

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வறட்சியால் கரையோரப் பகுதிகளில் பிரதான வீதியோரங்களில் அங்காங்கே வெள்ளரிப்பழ விற்பனை அதிகரித்துள்ளது.

குறிப்பாக சம்மாந்துறை - அம்பாறை பிரதான வீதி, கல்முனை- அக்கரைப்பற்று , பிரதான வீதியோரங்களில் சைக்கிள்கள், மோட்டார் சைக் கிள்கள், ஓட்டோக்களில் வெள் ளரிப் பழத்தை கொண்டு வந்து வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

பொதுமக்கள் ஆர்வத்து டன் வெள்ளரிப் பழங்கள் கொள் வனவில் ஈடுபடுவதை அவதா னிக்க கூடியதாக இருந்தது.

தற்போது அதிக வெப்பம் காரணமாக அம்பாறை மாவட் டத்தில் வெள்ளரிப் பழத்துக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது டன், 150 ரூபாய் முதல் சுமார் 350 ரூபாய் வரை அவற்றின் அளவுக்கு ஏற்ப விற்பனையா கின்றன. (ஐ)



# கிழக்கு ஆயுர்வேத அமைச்சுக்கு இணைப்பு அதிகாரி நியமனம்!

மட்டக்களப்பு, மார்ச் 09

சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி, சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சர் சிறிர ஜயக்கொடியின் கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபி விருத்தி தொடர்பான இணைப்பு அதிகாரியாக நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத் தியர் ஏ. சி. டில்சாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலை களின் அபிவிருத்தி, சமுதாய சுகாதார இராஜாங்க அமைச் சர் சட்டத்தரணி சிறிர ஜயக் கொடி தனது அமைச்சில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்தார். (ஐ)



# பெண் முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும்!

மூதூர், மார்ச் 09

சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி, பெண் முயற்சியாளர் களின் கைத்தொழில் பொருள் களை காட்சிப்படுத்தலும் விற்பனை செய்தலும், மூதூர் மக்கள் வங்கியின் கிளைக்கு முன் பாக நேற்று செவ்வாய்க்கிழம நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலகமும், மக்கள் வங்கியும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந் தன.

இதன்போது மூதூர் பகுதி யைச் சேர்ந்த பெண் முயற்சியா ளர்களின் கைத்தொழில் பொருள்கள், சிற்றுண்டிகள் மற்றும் கைப்பணிகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு, விற் பனையும் செய்யப்பட்டன. (ஐ)





# மாகாண அரச நிறுவனங்களின் மின்கட்டணத்தை குறையுங்கள்!

## ஆளுநர் அநுராதா யஹம்பத்

திருகோணமலை, மார்ச் 09

மாகாண சபைகளின் கீழ் உள்ள நிறுவனங்களின் மின்சா ரக் கட்டணத்தை கணிசமான அளவு குறைப்பதற்கு உடனடி யாக நடவடிக்கை எடுக்குமாறு, அனைத்து மாகாண அரச நிறுவ னங்களின் தலைவர்களுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் நேற்று முன்தினம் பணிப்புரை விடுத் துள்ளார். அனைத்து மாகாண ஆளு நர்களுக்கும் இடையில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நடத்திய விசேட கலந்துரை யாடலின் பின்னரே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள் ளது. இதன்படி, அனைத்து மாகாண அரச நிறுவனங்களின் மின்சார கட்டணத்தை குறைந்த பட்சம் 20 சதவீதமாகவும் அதிக பட்சமாக 50 சதவீதமாகவும் குறைக்க நடவடிக்கை எடுக் கப் பட வேண்டுமென நிதி அமைச் சர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவுறுத்தல்களுக்கு அமைய, நேற்று முதல் மின் கட்டணத்தை குறைக்குமாறு ஆளுநர் மேலும் பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

# மேற்குலக நாடுகளின் எண்ணெய் வர்த்தக தடையால் பேரழிவு வரும்

## ரஷ்யா எச்சரிக்கை



மொஸ்கோ, மார்ச் 09

ரஷ்ய எண்ணெய் வர்த்தகத்துக்கு மேற்கத்திய நாடுகள் விதித்துள்ள தடையால் உலக சந்தையில் பேரழிவு விளைவுகள் ஏற்படும். இந்தத் தடைகளால் பெற்றோல் விலை ஒரு பீப்பாய் 300 டொலராக உயர வாய்ப்புள்ளது என ரஷ்யாவின் துணை பிரதமர் அலெக்சாண்டர் நோவக் எச்சரித்துள்ளார். ரஷ்யாவின் எண்ணெய் வர்த்த கத்தில் மேற்கத்திய நாடுகளின் தடை தொடருமானால் ஜேர்மனிக்கான முக்கிய எரிவாயுக் குழாய் மூடப்படலாம் எனவும் அவர் கூறினார்.

உக்ரைன் மீதான படையெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்கா அதன் நட்பு நாடுகளுடன் சேர்ந்து ரஷ்யா மீது விதிக்கக்கூடிய மேலும் சில தடைகள் குறித்து விவாதித்து வருகின்றது. ஆனால், ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து நாடுகள் இந்த ஆலோசனைகளை நிராகரித்தன. ஐரோப்பிய ஒன்றியம் அதன் மொத்த எரிவாயுவில் 40 வீதம் மற்றும் அதன் எண்ணெய் கொள்முதலில் 30 வீதத்தை ரஷ்யாவிடமிருந்துதான் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில் ரஷ்யாவிலிருந்து எரிசக்தி விநியோகத்தை நீங்கள் நிராகரிக்க விரும்பினால் அதனை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். எரிசக்தி விநியோக மாற்று வழிகள் குறித்து நாங்கள் ஆராய்வோம் என ரஷ்யாவின் துணை பிரதமர் அலெக்சாண்டர் நோவக் கூறினார். தடை தொடருமானால் ஜேர்மனிக்கான முக்கிய எரிவாயுக் குழாய் மூடப்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பிரான்ஸ் ஊடாக இங்கிலாந்துக்குள் நுழைந்த உக்ரைன் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்!

பரிஸ், மார்ச் 09

பிரான்சின் கலேஸிலிருந்து இங்கிலாந்துக்குள் நுழைய முயன்ற சுமார் 300 உக்ரேனிய அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

பல அகதிகள் பிரான்சில் இருந்து கலேஸ் துறைமுகம் வழியாக இங்கிலாந்துக்கு எல்லையை கடக்க முற்படுகின்றனர். உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு தொடங்கியதில் இருந்து சுமார் 589 பேர் இங்கிலாந்துக்குள் வந்துள்ளனர் என்று கலேஸின் துணை அரசியல் தலைவர் வெரோனிக் டெப்ரெஸ் போடியர் தெரிவித்துள்ளார்.

துக்குள் நுழைய முயன்ற 286 பேர் அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறினார்.

உக்ரேனிய குடும்ப மீளிணைவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக சுமார் 17,700 பேர் இங்கிலாந்துக்கு வர விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 300 பேருக்கே விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரிட்டன் மிகவும் தாராளமான நாடு. ஆனால் எங்கள் நாட்டிற்குள் வருபவர்கள் யார் என்பதை நாங்கள் தீர ஆராய விரும்புகிறோம் என இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார்.




இதற்கிடையே ரஷ்ய படையெடுப்பில் இருந்து தப்பி வெளியேறும் உக்ரேனியர்களுக்கு தற்காலிக குடியுரிமை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புக் கொண்டது. அத்துடன், அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை வேலைவாய்ப்பு, சமூக நலன் மற்றும் வீட்டு வசதி ஆகியவற்றை வழங்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. இந்நிலையில் இங்கிலாந்து அகதிகளைத் திருப்பி அனுப்பியுள்ளமை குறித்து இங்கிலாந்து அரசாங்கத்தை அகதிகள் நல அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர். (அ)

# கார்கிவ் நகரில் நடந்த சண்டையில் ரஷ்ய இராணுவ ஜெனரல் மரணம்!

கீவ், மார்ச் 09

உக்ரைன் - கார்கிவ் நகர் அருகே நடந்த சண்டையின் போது ரஷ்ய இராணுவத்தின் உயர்மட்ட தளபதி ஒருவர் கொல்லப்பட்டதாக உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சக உளவுத்துறை தெரிவித்துள்ளது.



மத்திய இராணுவ மாவட்டத்தின் 41 -ஆவது இராணுவ படைபிரிவின் முக்கிய ஜெனரல், தலைமைத் தளபதி மற்றும் முதல் துணைத் தளபதி ஆக இருந்த விட்டலி ஜெராசிமோவ் என்பவரே கொல்லப்பட்டதாக உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. அத்துடன், உக்ரைனின் தாக்குதலில் மேலும் பல சிரேஷ்ட ரஷ்ய இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர் என பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெராசிமோவ் இரண்டாவது செச்சென் போரிலும் சிரியாவில் ரஷ்ய இராணுவ நடவடிக்கையிலும் பங்கேற்றதாக உக்ரேனிய உளவுத்துறை கூறுகிறது. அத்துடன், கிரிமியாவைக் கைப்பற்றும் போராட்டத்தின்போதும் பங்கேற்று பதக்கம் பெற்றார். உக்ரேனிய அதிகாரிகள் கொல்லப்பட்ட இராணுவ உயர் அதிகாரிகள் ஜெராசிமோவ் புகைப்படத்தையும் டுவிட்டரில் பதிவிட்டுள்ளனர். (அ)

## அணுக்கதிரியக்க பாதுகாப்புக்காக

# 2.5 மில்லியன் டோஸ் அயடினை உக்ரைனுக்கு அனுப்பிய பிரான்ஸ்

பரிஸ், மார்ச் 09

பிரான்ஸ் உக்ரைன் மக்களுக்காக 2.5 மில்லியன் அயோடின் டோஸ் அடங்கிய மருத்துவ உதவிப் பொருள்களை அனுப்பியிருக்கிறது. வெளிவிவகார அமைச்சர் அதனை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

உக்ரைன் நாட்டின் அணு மையங்கள் போரில் தாக்கப்படக் கூடிய பேராபத்து நிலை தொடர்ந்து காணப்படுகிறது. இதனால் அங்குள்ள மக்கள் எந்த நேரமும் அணுக் கதிர்வீச்சு ஆபத்தை எதிர் கொண்டுள்ளனர். அதனைக்கருத்திற் கொண்டே பிரான்ஸ் அயோடின் மாத்திரைகளை அங்கு அனுப்பியிருக்கிறது. அதிபர் மக்ரோன் அணுப் பாதுகாப்புத் தொடர்பாக உக்ரைன் அதிபருடன் ஞாயிறன்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசியிருந்தார். இதேவேளை, அணு அனர்த்தம் ஒன்றை எதிர்பார்த்து ஐரோப்பிய மக்கள் அயோடின் மாத்திரைகளை வாங்கிச் சேமிக்கத் தொடங்கியிருப்பதால் அதன் விற்பனை சடுதியாக உயர்ந்திருக்கிறது.

இதற்கிடையில் - தாக்குதல் பகுதிகளிலிருந்து வெளியேறுகின்ற உக்ரைன் மக்களுக்குப் பாதுகாப்பான வழிகளைத் திறப்பதாக உறுதியளித்திருந்த மொஸ்கோ, இப்போது அகதிகள் தனது நாட்டுக்குள்ளும் பெலாரஸினுள்ளும் செல்வதற்கான வழிகளை மாத்திரமே அறிவித்திருக்கிறது. பல லட்சக்கணக்கான அகதிகள் மேற்கே போலந்து நோக்கியும் அங்கிருந்து ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் நகர்ந்துவரும் நிலையில் அவர்களை ரஷ்யாவுக்குள் வரவழைக்கு மனிதாபிமான வழிகளைத் திறந்துள்ளார் புடின்.

இது அவரது தார்மீக மற்றும் அரசியல் ரீதியான இழிவான தன்மையையே காட்டுகிறது என்று அதிபர் மக்ரோன் கண்டித்திருக்கிறார். (அ)



# சோவியத் கால போர் விமானங்களை உக்ரைனுக்கு தர அமெ. ஆலோசனை

## வான் தளங்களை அழிக்க ரஷ்யா குறி

லண்டன், மார்ச் 09

போலந்திடம் உள்ள சோவியத் கால போர் விமானங் களை உக்ரைனுக்கு வழங்கு வது தொடர்பில் அந்த நாட்டுடன் அமெரிக்கா பேச்சு நடத்திவருகிறது. "வான்பறப்பு தடை வலயம் ஒன்றை அறிவியுங்கள், அல்லது, போர் விமானங்களைத் தாருங்கள்" என்று உக்ரைன் அதிபர் வோலோ டிமிர் ஸெலென்ஸ்கி அமெரிக்க செனட்டர்களிடம் அவசர கோரிக்கை விடுத்திருந்தார். நவீன யுத்த விமானங்களை விடவும் தங்களது விமானிகளுக்குப் பரீட்சியமான - இலகுவாக அவர்களால் இயக்கக் கூடிய - விமானங்களைத் தருவதே பயனுடையது என்றும் அவர் கேட்டிருந்தார்.

அதனை அடுத்தே, அதிபர் ஜோ பைடன் போலந்து அரசுடன் இது தொடர்பில் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார். சோவியத் காலத்து - பழைய "மிக் -29"(மிக்-29) போர் விமானங்களையும்"எஸ்.யு-25" தாக்குதல் விமானங்களையும் உக்ரைனுக்கு வழங்கு வதற்கு உடன்பாடு எட்டப்படவுள்ளது.

போலந்து தன்வசம் உள்ள விமானங்களை உக்ரைனுக்கு வழங்கும். அதனால் ஏற்படுகின்ற வெற்றிடத்தை அமெரிக்கா தனது விமானங்களைப் போலந்துக்கு வழங்கிச் சரிசெய்துகொள்ளும் வகையில் உடன்பாடு அமையவுள்ளது. இதே உத்தரவாதங்களின் அடிப்படையில் பல்கேரியா, ஸ்லோவேனியா ஆகியனவும் தம்வசம் உள்ள பழைய விமானங்களை உக்ரைனுக்கு வழங்க ஆயத்தமாக உள்ளன. இந்த விமானப் பரிமாற்ற உடன்பாட்டுக்கு அமெரிக்கக் காங்கிரஸின் ஒப்புதல் பெறவேண்டிய அவசியம் உள்ளது.

மேற்குலகின் போர் விமானங்கள் கிடைப்பதற்கு முன்பாக உக்ரைன் படைகளது வான் தளங்களை அழிப்பதில் ரஷ்யா குறியாக உள்ளது. தலைநகரில் இருந்து 200 கிலோ மீற்றர்கள் தொலைவில் உக்ரைனின் மத்திய பகுதியில் உள்ள வின்னிற்சியா நகர விமான நிலையத்தை ரஷ்யப்படைகள் குண்டுவீசித் தாக்கியுள்ளன.

உக்ரைன் நாட்டின் போர் விமானங்கள் தங்கிச் செல்ல ருமேனியா இடமளிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ள ரஷ்யா அது போரில் ஒரு தலையீடாகவே பார்க்கப்படும் என்று எச்சரித்துள்ளது.

முந்திய வரலாறு :

அணு ஆயுத பலத்தில் இங்கிலாந்தை விஞ்சியதாக இருந்த உக்ரைன் இன்று பழைய சோவியத் விமானங்களைக் கேட்டு உலகிடம் கையேந்தும் நிலை உருவானதுக்கு புடாபெஸ்ட் உடன்படிக்கையும் ஒரு காரணமாகும்.

உக்ரைன் சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்த பிறகு 1994 டிசெம்பரில் ஹங்கேரி தலைநகரில் அணுவாயுதக் குறைப்புடன் தொடர்புடைய முக்கிய உடன்படிக்கை ஒன்றில் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, உக்ரைன், பெலாரஸ், கசகிஸ்தான் ஆகிய ஆறு நாடுகள்ஒப்பமிட்டன. இந்த உடன்படிக்கை வழங்கிய உத்தரவாதத்தின் பேரிலேயே உக்ரைன் தனது வசம் இருந்த பெரும் அணுவாயுதக் கிட்டங்கியை ரஷ்யாவிடம் ஒப்படைப்பதற்கு இணங்கியது.

உலகின் அணு வல்லரசுகளாக இருந்தஅமெரிக்கா, ரஷ்யா மற்றும் இங்கிலாந்து மூன்று நாடுகளும் இந்த உடன்படிக்கை யில் உக்ரைனின் "சுதந்திரம் மற்றும் இறையாண்மையையும் அதன் அப்போதைய எல்லைகளையும் மதிக்கவும்" மற்றும் நாட்டிற்கு எதிரான "அச்சுறுத்தல் அல்லது சக்தியைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கும்" உறுதியளித்தன. தன் வசம் இருந்த சுமார் ஆயிரத்து 900 மூலோபாய அணு ஆயுதங்களை உள்ளடக்கிய உலகின் மூன்றாவது பெரிய அணு ஆயுதக் களஞ்சியத்தைக் கைவிடுமாறு உக்ரேனிய அரசாங் கத்தை வற்புறுத்துவதில் அந்த உறுதிமொழிகள் முக்கிய பங்கு வகித்தன.

இந்த உடன்படிக்கையை மீறியே 2014 இல் ரஷ்யா உக்ரைனின் ஒரு பகுதியாகிய கிரிமியாவை ஆக்கிரமித்து தன்வசம் இணைத்துக் கொண்டது. உக்ரைன் போர் பற்றிய விவாதங்களில் பலர் இந்தபுடாபெஸ்ட் ஒப்பந்த மீறலைக் குறிப்பிடத் தவறுவதை அவதானிக்க முடிகிறது. (அ)

# ஐ. பி. எல். தொடரா? தாயக அணியா? தென்னாபிரிக்க வீரர்கள் குழப்பத்தில்!

கேப்டவுன், மார்ச் 08

பங்களாதேஷூக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், ஐ. பி. எல். தொடருக்கு தெரிவான தென்னாபிரிக்க வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

தென்னாபிரிக்காக சென்று 3 ஒருநாள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர்களில் பங்களாதேஷ் அணி விளையாடவுள்ளது. ஒருநாள் தொடர் வரும் 18ஆம் திகதியும் டெஸ்ட் தொடர் வரும் 30ஆம் திகதியும் ஆரம்பமாகின்றன.

இந்நிலையில், ஒருநாள் தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் ஐ. பி. எல். தொடரில் தெரிவாகியுள்ள 8 வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஐ. பி. எல். தொடர் ஆரம்பமாவதற்கு 3 நாட்கள் முன்பதாக ஒருநாள் தொடர் நிறைவடைகிறது. ஆனால், ஐ. பி. எல்லில் பங்கேற்கும் வீரர்கள் கட்டாயம் 3 நாட்கள் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். இதனால், ஒருநாள் தொடரில் இடம்பெற்றுள்ள ரபாடா, நிகிடி, வான் டேர் டுசென், டேவிட்




மில்லர், குயின்ரன் டி கொக், மார்க்ரம், டுவைன் பிரிடோரியஸ், மார்கோ யான்சென் ஆகிய 8 வீரர்களும் ஐ. பி. எல்லின் தொடக்க போட்டிகளில் விளையாட மாட்டார்கள்.தவிர, வரும் 30 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 12ஆம் திகதி வரை டெஸ்ட் தொடர் நடக்க வுள்ளது.

இந்நிலையில், ஐ. பி. எல். தொடரிலா, டெஸ்ட் தொடரிலா விளையாடுவது என்பதை வீரர்களே முடிவு எடுக்கலாம் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. வீரர்களின் முடிவைக் கொண்டு அவர்கள் எதற்கு விசுவாசமாக உள்ளார்கள் என்பது தெரிந்துவிடும். இதனால் எதைத் தெரிவு செய்வது என்பதில் தென்னாபிரிக்க வீரர்கள் குழப்பத்தில் உள்ளனர்.



## குண்டுவெடிப்பில் தப்பித்த டயானா இறுதியாட்டத்தில்!

லியோன், மார்ச் 09

கடந்த வாரம் ரஷ்யா நடத்திய குண்டுவெடிப்பில் தப்பிய உக்ரைன் வீராங்கனை டயானா யாஷ்ட்ரெம்ஸ்கா லியோன் ஓப்பனின் இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளார்.

ருமேனியாவின் சொரனா சிர்ஸ்டியாவை 7 -6 (7-5), 4-6, 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்ற டயானா இறுதியாட்டத்துக்கு முன்னேறினார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பைத் தொடர்ந்து தனது சொந்த நகரமான ஒடேஸாவை விட்டு டயானா கடந்த வாரம் வெளியேறியிருந்தார். இதன்போது குண்டு தாக்குதல் ஒன்றிலிருந்தும் அவர் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார்.

இதைத் தொடர்ந்து லியோன் ஓப்பனில் பங்கேற்று வருகிறார். இதனிடையே, தனது தயாரையும், 15 வயது சகோதரியையும் அவர் உக்ரைனிலேயே விட்டுப் பிரிய வேண்டிய கட்டாயம் நேர்ந்துள்ளது. இந்த நிலையில், அவருக்கு மக்கள் - ரசிகர்கள் பேராதரவு வழங்கி வருகின்றனர்.

மக்களின் - குறிப்பாக பிரெஞ்சு மக்களின் ஆதரவாலேயே தான் வெற்றி பெற்றார் என்று டயானா கூறியுள்ளார். (ஐ)



## உக்ரைன் - ஸ்கொட்லாந்து உதைந்தாட்டம் ஒத்திவைப்பு

லண்டன், மார்ச் 09

உக்ரைனுக்கு எதிரான ஸ்கொட்லாந்தின் உலகக் கிண்ணத் தகுதிக்கான அரையிறுதிப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி ஹம்ப்டனில் இந்த இரு அணிகளும் மோதவிருந்தன. ஆனால், ரஷ்யாவின் படையெடுப்பைத் தொடர்ந்து இந்தப் போட்டியில் உக்ரைன் அணி பங்கேற்பது சந்தேகமாக உள்ளது.

இந்த நிலையில் போட்டியை ஒத்தி வைப்பதுடன் அதனை வேல்ஸ் அல்லது ஆஸ்திரியாவுக்கு மாற்றவும் பேச்சு நடக்கிறது. அத்துடன், போட்டியை நடத்துவதற்கான திகதி குறித்தும் பேசப்படுகின்றது.

உலகக் கிண்ணப் போட்டி நவம்பர் 21 முதல் டிசெம்பர் 18 வரை நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



மகளிர் உலகக் கிண்ணம்

## அவுஸ்திரேலியாவிடம் வீழ்ந்தது பாகிஸ்தான்!

வெலிங்டன், மார்ச் 09

பாகிஸ்தானுக்கு எதிரான மகளிர் உலகக் கிண்ணப் போட்டியில் 7 விக்கெட் வித்தியாசத்தில் எளிதாக வென்றது அவுஸ்திரேலிய அணி.

முதல் போட்டியில் இந்தியாவிடம் தோற்ற பாகிஸ்தான் அணி, தனது 2ஆவது போட்டியில் அவுஸ்திரேலியாவை எதிர்கொண்டது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இந்தியாவுக்கு எதிராக மோசமாக துடுப்பாட்டம் செய்த பாகிஸ்தான் துடுப்பாட்ட வீராங்கனைகள் நேற்றும் ஓட்டங்களை எடுக்கத் திணறினர்.

அணித் தலைவி பிஸ்மா மஹ்ரூப் சிறப்பாக விளையாடி 122 பந்துகளில் 78 ஓட்டங்கள் எடுத்தார். ஏனைய வீராங்கனைகளில் அலியா ரியாஸ், 109 பந்துகள் எதிர்கொண்டு 53 ஓட்டங்களை எடுத்தார்.இதனால் 50 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட் இழப் புக்கு 190 ஓட்டங்களையே எடுத்தது.

பலம் பொருந்திய அவுஸ்திரேலிய அணி, 34.4 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்களை எடுத்து எளிதாக வெற்றி பெற்றது. அலிஸா ஹீலி 72 ஓட்டங்கள் எடுத்தார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிராக அவுஸ்திரேலியா தொடர்ச்சியாகப் பெறும் 12ஆவது வெற்றி இதுவாகும். (ஐ)

## பெங்களூர் அணியின் தலைவராக பிளசிஸ்?

பெங்களூர், மார்ச் 09

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் புதிய தலைவர் எதிர்வரும் சனிக்கிழமை அறிவிக்கப்படவுள்ளார்.

2021 ஐ. பி. எல். தொடரின் பின்னர் அணித் தலைவர் பதவியிலிருந்து விராட் கோலி விலகினார். இந்த ஆண்டு விராட் கோலியை பெங்களூார் அணி தக்கவைத்துள்ள போதிலும், அவர் தலைமைப் பொறுப்பை ஏற்க மாட்டார்.

இந்த நிலையில் வரும் சனிக்கிழமை அணித் தலைவரின் பெயர் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் என்று அந்த அணியின் நிர்வாகம் அறிவித்துள்ளது. ஐ. பி. எல்லில் விளையாடும் 10 அணிகளில் பெங்களூார் மட்டுமே தலைவரை அறிவிக்கவில்லை.

இந்த நிலையில், தென்னாபிரிக்க வீரரான பப் டூ பிளசிஸ் அந்த அணியின் தலைவராக நியமிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது. கடந்த ஆண்டு சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடிய இவரை, அண்மையில் நடந்த ஏலத்தில் 7 கோடி இந்திய ரூபாய்க்கு பெங்களூார் எடுத்தது.

டூ பிளசிஸ் ஐ. பி. எல். தொடரில் 100 போட்டிகளில் விளையாடியுள்ளார். 22 அரைச்சதங்களுடன் 2,935 ஓட்டங்களை அவர் குவித்துள்ளார். 2021 ஐ. பி.எல்லில் 16 போட்டிகளில் அவர் 633 ஓட்டங்களை குவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)





# மன்னார் மாவட்ட செயலகத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு!

*மன்னார், மார்ச் 09*

'நாளைய நிலை பேறுக்கான இன்றைய பால்நிலை சமத்துவம்' எனும் கருப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மகளிர் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு, மன்னார் மாவட்ட செயலகம், மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், மன்னார் மாவட்ட குடி சார் அமைப்புகளின் சம்மேளனம் ஆகியவை ஒன்றிணைந்து சர்வதேச மகளிர் தின நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது நிகழ்வுகள் இடம் பெற்றதோடு மாவட்டத்தின் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், மாதர், கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்தியாவை மீறி எந்தவொரு நாடுமே இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்காது

## கூறுகிறார் சரவணபவன்

*யாழ்ப்பாணம், மார்ச் 09*

தமிழர்களின் அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களில் இந்தியாவை மீறி ஏனைய நாடுகள் இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகிக்காது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், ஐ.நா.வில் வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்னை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தியா வலியுறுத்தியமை மன ஆறுதலை தருகிறது.

13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை மட்டுமே இந்தியாவினால் வலியுறுத்த முடியும். அதனை மீறி அவர்களால் இலங்கை இறையாண்மைக்குள் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது.

ஏற்கனவே இருக்கும் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்பன மக்களுக்கு கிடைத்திருந்தால் ஜனநாயக வழிகளில் போராட்டத்தை நடத்தி அதற்கு மேலும் கோரியிருக்க முடியும்.

இந்தியாவை மீறி எந்தவொரு நாடும் இதனை வலியுறுத்த முடியாது என்பதனால் அவர்களுடன் இணைந்து இலக்கை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
04
-
05
-
1947



**மறைவு**
03
-
03
-
2022

## திருமதி பூமலர் சிவராசா

சரசாலையைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும், நெதர்லாந்து Kampen ஐ வதிவிடமாகவும் கொண்ட பூமலர் சிவராசா அவர்கள் 03.03.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற சிவராசா அவர்களின் அன்பு மனைவியும்,சிவலோகநாயகி(இலங்கை), வேதநாயகி, காலஞ்சென்ற பத்மநாதன், யோகராசா, இராசமலர்(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,சுமதி(சுவிஸ்), காலஞ்சென்ற சுதாகரன்(இலங்கை), சுகந்தினி(சுவிஸ்), சுதாதினி(சுவிஸ்), சுகர்னா(நெதர்லாந்து), சுதர்சினி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறிபதி (சுவிஸ்),வில்வராசா(சுவிஸ்),காலஞ்சென்றகிருஷ்ணமூர்த்தி(சுவிஸ்), சதானந்தன்(நெதர்லாந்து), ஆனந்தகுமரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,கஜந்தன், கஜீபன், சைனஜா, விலோஜன், கீர்த்திகா, கரணிகா, கர்சனா, தர்சன்(சுவிஸ்), அர்ச்சனா, அமிர்தன், அனோஜன்(நெதர்லாந்து), அபிநயா, அஜய், ஆகேஷ்(சுவிஸ்) ஆகி யோரின் அன்புப் பேத்தியும்,றிதுஷன், அமயா(நெதர்லாந்து) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*கிரியை*
Tuesday, 08 Mar 2022 3:00 PM - 5:00 PM
Crematorium yardenhuis Reestborgh Edison 1, 7942 DE Meppel, Netherlands

*தகனம்*
Tuesday, 08 Mar 2022 6:00 PM
Crematorium yardenhuis Reestborgh Edison 1, 7942 DE Meppel, Netherlands


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**குமார் - மருமகன்** Mobile : +41796525376
**அர்ச்சனா - பேர்த்தி** Mobile : +31648779954

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
20
-
01
-
1944



**மறைவு**
02
-
03
-
2022

## தம்பு துரை

யாழ். உரும்பிராய் மேற்கு சிவகுல வீதியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Mörfelden-Walldorf ஐ வதிவிடமாகவும் கொண்ட தம்பு துரை அவர்கள் 02.03.2022 புதன்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பு சடச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன் பூபதி தம்பதிகளின் மருமகனும், ஞானமலர் (மதி) அவர்களின் பாசமிகு கணவரும், ரஜினி (ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி), லெனின்ராஜ் (ஜேர்மனி), விஜயகுமார் (ஜேர்மனி), ரஞ்சித்குமார் (ஜேர்மனி), ஜெய்பிரகாஷ் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீஸ்கந்தராசா, ராகினி, இருமலர், ராதாசலூஜா, லாவண்யா , சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், பொற்கொடி, அருமைநாதன், செல்வராஜா, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், அன்னலிங்கம், சிவபாக்கியம், கனகம்மா, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நேசமலர், நவமலர், சிவராஜா, சைலசிறி, காலஞ்சென்றவர்களான தர்மகுலசிங்கம், ஜெயராசாசிங்கம், பொன்புகழ்ராஜா, செல்வராணி, விஜயஸ்ரீ ஆகியோரின் அன்பு மைத்துனரும், தம்பையா, செல்வராஜா, நாகேந்திரன், யோகராணி, ரஜினா, ராஜதுரை, ரமேஸ் ஆகியோரின் சகலனும், ரஜிந்தன், அருந்தன், சுஜிந்தன், அட்சயா, அபிஷா, அனிர்தன், அஷாந்தன், அனிஸ்தன், அடிஸ்தன், அனோஷன், அபிநாஷ், விதுஷன், அஸ்வின், அட்சிந்த், ஆஷா, நிதூன், நீலு ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*பார்வைக்கு :*
Thursday, 10 Mar 2022 11:30 AM - 3:00 PM
Friedhof Offenbach a. Main (Neuer Friedhof) Mühlheimer Str. 425, 63075 Offenbach am Main, Germany

*கிரியை :*
Thursday, 10 Mar 2022 11:30 AM - 3:00 PM
Friedhof Offenbach a. Main (Neuer Friedhof) Mühlheimer Str. 425, 63075 Offenbach am Main, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண் முன்னே வாழ்ந்த காலம்*
*கனவாகிப் போனாலும்*
*எங்கள் முன்னே உங்கள் முகம்*
*என்றும் உயிர் வாழும்*
*எங்கள் இதயமதில் இறுதி வரை*
*நிலைத்து நிற்கும் அப்பாவாழ்விற்கு இலக்கணம் வகுத்து*
*வாழ்வாங்கு வாழ்ந்து*
*வானுறையும் நீங்கள்*
*தெய்வத்தில் வைக்கப்பட*
*இறைவனை வேண்டுகிறோம்.*

தொடர்புகளுக்கு:
**சிவகுமார் (மகன்) - 00491604785206**
**ரஜனி (மகள்) - 00491722605670**
**லெனின்ராஜ் (மகன்) - 004915758301831**
**விஜயகுமார் (மகன்) - 004915253565714**
**ரஞ்சித்குமார் (மகன்) - 00491734811288**
**ஜெயபிரகாஷ் (மகன்) - 004915201909108**

*தகவல் :*
**மனைவி, பிள்ளைகள்**

## காகித தட்டுப்பாடு...

றாகத் தடைப்பட்டுள்ளது.

பத்திரிகை நிறுவனங்கள் களஞ்சியப் படுத்திய அல்லது பலமடங்கு விலை கொடுத்து காகிதங்களை கொள்வனவு செய்ததன் மூலமாக அண்மைநாட்களாக பத்திரிகைகள் வெளியாகி வருகின்றன. இதனால் அச்சிடும் செலவு பலமடங்கு உயர்ந்துள்ளது. எனினும், கடந்த சில நாட்களாக பத்திரிகைகளை அச்சிடுவதற் கான செய்தித் தாள்களுக்கு அதீத பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், பத்திரிகைகளின் - அதிலும் குறிப்பாக பிராந்தியப் பத்திரிகைகளின் வெளியீடு கள் நின்றுபோகும் நிலை எழுந்துள்ளது.

எனினும், யாழ்ப்பாணத்தில் யுத்த காலத்தில் பொருளாதார தடை நீடித்த காலப் பகுதியில் 1992 - 1995 வரையான காலப் பகுதியில் அப்பியாசப் புத்தகங் களின் தாள்களிலும் (CR book sheet), கோப்பு மட்டைகளிலும் (File மற்றும் bristle board) நாளிதழ்கள் வெளியாகி யிருந்தன. பின்னர் 2006ஆம் ஆண்டு ஏ-9 வீதி மூடப்பட்டு இறுதிக் கட்ட யுத்தம் ஆரம்பித்த காலப்பகுதியிலும்கூட யாழ்ப் பாணத்தில் இவ்வாறான நிலைமை உரு வாகியிருந்தது. இந்தக் காலப் பகுதிகளைப் போன்ற இக்கட்டான நிலைமைக்குள் பத் திரிகைகள் தள்ளப்பட்டுள்ளன. (ஐ)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற் றது.

இதன்போது, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள 15 விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச் சர் பஸில் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த் தன, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மற்றும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதி பதியுமான மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸநாயக்க, தயாசிறி ஜயசேகர, லசந்த அழகிய வண்ண, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய, பாராளுமன்ற உறுப்பினர் களான அங்கஜன் இராமநாதன், ஜகத் புஷ்பகுமார, சாந்த பண்டார, சாரதீ துஷ்மந்த, ஷான் விஜயலால் டி சில்வா, சாமர சம்பத், சுரேன் ராகவன் ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## முறைப்பாடுகளை...

முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் முக்கிய தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி,

2016 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றிய அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. குறித்த அலுவலகத்தால் மாத்தறை, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட் டுள்ளன. அத்துடன் இந்தப் பிராந்திய அலுவலகங்களுக்கு காணாமல் ஆக்கப் பட்டோர்கள் தொடர்பில் 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள் ளன.

சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய முறை யான விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட ஆட் களின் உறவினர்களுக்கு அறிக்கைகளை வழங்கல் உள்ளிட்ட அதிக பணிகளை காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள் ளது. அதற்கமைய, குறித்த முறைப்பாடு களை விசாரணை செய்து முடிவுறுத்து வதற்காக 25 விசாரணைக் குழுக்களை நியமித்து துரித வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பதிலடி...

அமைச்சு பதவியை வகித்த ஜயந்த சமரவீரவும் பதவி விலகியுள்ளார்.

தேசியப்பட்டியல் ஆசனம் ஒன்று உட்பட தேசிய சுதந்திர முன்னணியின் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜெனிவாவில்...

யுள்ளதாக அவர் கூறினார்.

தெற்கு, தென்கிழக்கு மற்றும் மத்திய ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடு கள் பல இலங்கைக்கு ஆதரவு வழங்கியது எனவும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்றுக்கு மத்தியில் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை களை மேம்படுத்துவதில் இலங்கையின் அர்ப்பணிப்பு குறித்து அவர்கள் பாராட் டினர் என அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரி மைகள் ஆணையாளரினால் முன்வைக் கப்பட்ட அறிக்கை கடுமையான முரண் பாடுகள் மற்றும் பலவீனங்களைக் காட் டுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## கொத்து...

பர்ஹர் போன்று கொத்து ரொட்டிக்கு இலங்கை காப்புரிமை பெற முடியும். கொத்து ரொட்டி மட்டக்களப்பிலிருந்து நாடெங்கும் பரவி இலங்கையர்களின் விருப்புக்குரிய முக்கிய உணவாக மாறியது. தற்போது ஐஸ்கிறீம் கொத்து உட்பட பல வகைகள் இருக்கின்றன.

இலங்கையின் பூர்வீக உணவுகளுக் கான காப்புரிமையை பெற்றுக்கொள்வ தில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அபிவிருத்தியடைந்த நாடுகளுடனான வர்த்தகத்தை வலுப்படுத்துவதற்கான வழிமுறையாக இதனைப் பயன்படுத்த லாம். இது நாட்டின் ஏற்றுமதித் துறையை மேம்படுத்துவதுடன் இலங்கைக்கும் சாதக மான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தந்தையால்...

தனது தந்தை மதுபோதையில் வந்து தாயருடன் தினமும் சண்டை போடு கிறார். அத்துடன், தன்னுடனும் அவர் தர்க்கத்தில் ஈடுபடுகிறார் என்றும் கூறிய சிறுமி, நீண்டநாட்களா தொடரும் தந்தை யின் சித்திரவதையைத் தாங்க முடியாமலே தஞ்சமடைந்ததாகக் கூறியுள்ளார்.

தஞ்சமடைந்த குறித்த சிறுமியை கோப் பாய் பிரதேச செயலக நன்நடத்தை பிரி விடம் அச்சுவேலிப் பொலிஸார் ஒப் படைத்தனர்.

குறித்த சிறுமி வீட்டின் மூத்த பிள்ளை எனவும் இவரை விட இரு பிள்ளைகள் இருக்கின்றனர் என்றும் பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிய வந்துள்ளது. (ஐ)

## ஏப்ரலில்...

உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பொறுப்பேற்பார் என்று கொழும்பு உயர் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பெரும் பொருளாதார நெருக்கடியிலி ருந்து விடுபடவும் - பெரும் சர்வதேச உதவிகளைப் பெறும் நோக்கிலுமே தேசிய அரசாங்கத்தை உருவாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன என்றும் கூறப்படு கின்றது.

அத்துடன், தேசிய அரசாங்கத்தின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பொறுப் பேற்பார். அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து 15 உறுப்பினர்கள் ரணி லுடன் ஒன்றிணைவர் என்றும், இதே சமயம் சிறீலங்கா பொதுஜன பெரமுன வின் தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் ஐவர் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த ஐந்து பேர் பாராளுமன்ற உறுப்பினர் களாக பதவியேற்கும் விதமாகப் பதவி விலகுவர் எனவும் கூறப்படுகின்றது.

இதேநேரம், நிதி அமைச்சராக பஸில் ராஜபக்ஷவே தொடர்ந்தும் பதவி வகிப் பார் எனவும் வெளியான தகவல்கள் தெரி விக்கின்றன. (ஐ)

# சமத்துவத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் மகளிர் நாள்!

கிளிநொச்சி, மார்ச் 09



"ஆணுக்கு பெண் சரி நிகர் அது நம் சமத்துவம் உணர்" எனும் தொனிப் பொருளில் சமத்துவ கட்சியின் ஏற்பாட் டில் சர்வதேச பெண்கள் தினம் கிளி நொச்சியில் கொண்டாடப்பட்டது.

நேற்று காலை 11 மணிக்கு கிளி நொச்சி திருநகர் கல்வி, பண்பாடு, அபி விருத்தி மன்றத்தில் சமத்துவக் கட்சி யின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராகப் பங்கேற்ற அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் மு. சந்திரகுமார் தனது உரையில், "கிளிநொச்சியிலுள்ள மூன்று உள்ளூராட்சி மன்றங்களிலும் அதிகளவு பெண் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரேயொரு கட்சியாக சமத் துவக் கட்சி காணப்படுவதோடு, வெறு மனே பேச்சளவில் மாத்திரமன்றி பெண்களின் உரிமைகள் நலன்களில் செயல்பாட்டு ரீதியாக தனது நடவடிக் கைகளை முன்னெடுத்துள்ள கட்சியாகவும் செயல்பட்டு வருகிறது என்று கூறினார்.

"கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பெண்களை பலப்படுத்து கின்றபோது அவர்களின் உரிமைகளும் நலன்களும் பாதுகாப்படும். மாறாக சமூகத்தில் பெண்கள் நலிவுற்றவர்களா கக் காணப்படுகின்ற போது அங்கே பெண்களின் உரிமைகள் மிக மோசமான வகையில் பாதிக்கப்படுகிறது", என்று நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் மேரி டென்சியா தெரி வித்தார்.

இந் நிகழ்வில் பிரதேச சபை உறுப்பி னர்கள், பொது மக்கள், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## அழிவுகளுக்கு...

ஞங்கள் அதுதான் எமது பிரச்னைக்கான தீர்வுக்கு ஆரம்ப புள்ளி என நான் கடந்து 30 வருடங்களுக்கு முன்பிருந்து வலியு றுத்தி வந்திருக்கின்றேன். எனது இந்த தீர்க்கதரிசனமிக்க கூற்றை 30 வருடங் களுக்கு முன்னர் இன்று ஏற்றுக்கொண் டதுபோல ஏற்றிருந்தால் இத்தனை அழிவு களையும் துயரங்களையும் எமது மக்கள் கண்டிருக்க வேண்டி ஏற்பட்டிருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையை தேசிய பாட சாலையாக தரமுயர்த்தும் நிகழ்வில் நேற்று பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "பெண்களின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் வகையில் தமிழர் தேசத்தை மட்டுமன்றி பெண்கள் சமூகமும் தலைநிமிரும் காலத்தை உருவாக்குவோம்.

ஆயுதப் போராட்ட களமுனையில் முதல் வீரகாவியமான பெண்ணாகவும் எனது சகோதரியான மதிவதனி என்றும் இயற்பெயர் கொண்ட சோபா வரலாற் றில் பதிவாகியுள்ளார். இதுமட்டுமல்லாது எனக்கும் கட்சிக்கும் மிக நெருக்கமான மனித உரிமை சட்டத்தரணியுமான மகேஸ் வரி வேலாயுதம் உள்ளிட்ட ஏராளமான வர்களையும் வன்முறையாளர்களினால் இழந்திருக்கின்றேன்.

அனபடியால் எனக்கு இந்த போராட் டத்தின் வலிகள் நன்கு தெரியும். அத னால்தான் இந்த போராட்டத்தின் அழிவு களுக்கும் இழப்புகளுக்கும் நானும் ஏதோ ஒரு வகையில் பொறுப்புக்கூற வேண்டும் என்றதனடிப்படையில் அதற்கான தார் மீக பொறுப்பேற்று எமது மக்களின் மீள் எழுச்சிக்கு என்னாலான சேவைகளை தொடர்ந்து செய்துவருகின்றேன்.

72களில் தரப்படுத்தலுக்கு எதிராக நாம் போராடியிருந்தோம். அதன்பின்னர் பல வருடங்கள் கழித்து நான் அமைச்சராக இருந்தபோது ஸ்ரான்லி வீதியில் 400 முதல் 500 பேர் என்னை வந்து சந்தித்து தரப்படுத்தல் ஊடாக தமக்கான பல்கலை நுழைவை ஏற்படுத்தி தருமாறு கோரியிருந் தனர்.

அன்று தரப்படுத்தலை எதிர்த்த நாம் அதன்பின்னர் அதை வேண்டும் என கோரி யமையானது எமது தமிழ் மக்களின் அன்றைய அரசியல் தலைவர்கள் விட்ட தவறாகவும் அவர்கள் எமது மக்களுக்கு ஏற்படுத்திய தோல்வியாகவுமே அதை நான் பார்க்கின்றேன்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என் பதே எனது நிலைப்பாடு. அந்தவகையில் இனியாவது எமது மக்கள் சரியானது எது சரியாவனவர்கள் யார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 09

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது. கல் அறுக்கும் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த போதே குறித்த அனர்த் தம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் சுதேஸ்வரன் சுதர்சன் என்ற இளைஞரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். (ஐ)

## கிணற்றில்...

சிறுமியின் உடல் மீட்கப்பட்டு வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசா ரணைகள் மாங்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

## பயங்கரவாத...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர் தன, இந்த சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு விரோதமானது என உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்திருப்பதாகவும் கூறினார்.

எனவே அவற்றை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசி யம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## தமிழின...

நாள் திங்கட்கிழமை அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஈருருளி அறவழிப் போராட்டம் கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி பிரித்தானியாவில் ஆரம்பமானது. இலங்கை பேரினவாத அரசாங்கத்தால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழினப் படுகொலைக்கு சர்வதேச சுயாதீன விசாரணை வேண்டும், தமிழீழமே தீர்வு என்று வலியுறுத்தி 7 நாடுகளை கடந்து - 1,500 கிலோமீற்றர் பயணித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐ. நா. மனித உரிமை கள் முன்றலை அடைந்தது.

மனித நேய ஈருருளிப் பயண போராட் டக்காரர்களால் ஐ. நா. முன்றலில் ஈகைப் பேரொளிகள் முருகதாசன், செந்தில் குமரன் ஆகியோருக்கு மலர்வணக்கமும் செலுத்தப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## இலங்கைக்கு அனுப்பப்படும் 1 டொலருக்கு ரூ.38 ஊக்குவிப்பு

கொழும்பு, மார்ச் 09

வெளிநாட்டு பணியாளர்கள் நாட்டுக்கு அனுப்பும் ஒரு அமெரிக்க டொலருக்கு 38 ரூபா ஊக்க கொடுப்பனவு வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை எதிர்கொள்ளும் டொலர் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக இலங்கைத் தொழிலாளர்களின் வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தை திருப்பி அனுப்புவதை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
10 - 09 - 1930



ஆண்டவன் அடியில்
03 - 03 - 2022

### திருமதி மேரி ஆன் ஜெயமணி கனகரத்தினம் (அதிபர்)

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Greenwich ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மேரி ஆன் ஜெயமணி கனகரத்தினம் அவர்கள் 03-03-2022 வியாழக்கிழமை அன்று பிரித்தானியாவில் காலமானார்.

அன்னார் நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த மத்தியாஸ் யோசப் சின்னத்துரை (சித்த வைத்தியர், அதிபர்) மேரிதிரேஸ் அமிர்தம் தம்பதிகளின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை கந்தையா(பிரித்தானிய இலங்கை ராணுவ எழுத்தர்) வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும்,நெடுந்தீவு மேற்கை பூர்வீகமாகக் கொண்ட காலஞ்சென்ற கந்தையா கனகரத்தினம்(அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும்,சாந்தினி, மோகன்ராஜ், காலஞ்சென்ற தேவராகினி, வசந்தராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், நிக்கலஸ் லோயலா, சத்தியமதி, சிவரஞ்சனி ஆகியோரின் அன்பு மாமியாரும், வாகீசன், விஷானி, மார்க், லூக், காவியா, கவின் ஆகியோரின் பாசமிகு பாட்டியும், காலஞ்சென்ற றூபி அல்பிரட், இ.ராஜசூரியர் (பிரித்தானியா), காலஞ்சென்ற ஜெயராசா, ஜெயரட்ணம்(அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான அருட்சகோதரி ஒலிவியா, ஜெயசீலன் மற்றும் ஜெயபாக்கியம்(ஜேர்மனி), ஜெயமலர்(ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயந்திரா, ஜெனிற்றா (ஜேர்மனி), ஜெயசேகரா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அல்பிரெட், ஜெயராணி மற்றும் பற்ரிசியா(அவுஸ்திரேலியா), லெனிற்றா(அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, நடேசன் மற்றும் ஜெயந்திரன் (ஜேர்மனி), யோகவதி(ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வரட்ணம், திரேசா(சிங்கப்பூர்), காலஞ்சென்ற கோமதி குமாரசாமி, முத்தம்மா முத்துக்குமாரசாமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**மோகன்ராஜ் - மகன்**
**Mobile : +447502280190**

தகவல்:
**குடும்பத்தினர்**

# மலையக பெண்களாலேயே இந்நாட்டுக்கு டொலர் வந்தது

## சபையில் கூறினார் வேலுகுமார் எம்.பி.

கொழும்பு, மார்ச் 09

**“ஆடைக் கைத்தொழில், சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் என்பவற்றின் ஊடாக இந்நாட்டுக்கு டொலர்கள் வருவதற்கு முன்னர், எமது மலையக தாய்மாரே டொலர் வருமானத்தை பெற்றுக்கொடுத் தனர். எனினும், இந்நாடும், அரசுகளும் அவர்களுக்கு இன்னமும் உரிய பரிகாரத்தை வழங்கவில்லை” - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

சர்வதேச மகளிர் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. சுதந்திரத்துக்கு முன்னரும் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும் இந்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மலையக பெண்களின் பங்களிப்பு அளப்பரியது. ஆடைத்தொழிற்சாலை மற்றும் சுற்றுலாத்துறை என்பவற்றிலிருந்து இந்நாட்டுக்கு டொலர் வருவதற்கு முன்னர், இந்நாட்டுக்கு டொலர்களை உழைத்து தந்தது எமது மலையக தாய்மார், சகோதரிகளே. இந்நாட்டின் பொருளாதாரத்துக்காக இரத்தம் சிந்திய அவர்களுக்கு இந்நாடு மற்றும் அரசுகள் என்ன செய்துள்ளன? தொழில் இடங்களில் அவர்களுக்கான அடிப்படை வசதிகள்கூட இல்லை.

அதேவேளை, இன்று சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு அனுமதி வழங்கியது யார்? அரசின் முறையற்ற கொள்கை மற்றும் தெளிவற்ற பொருளாதாரம் காரணமாகவே நாட்டில் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. டொலரின் பெறுமதி அதிகரிக்கப்பட்டு, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது.

எனவே, பொருட்களுக்கான தட்டுப்பாடு, கறுப்புச்சந்தை, பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்டவற்றுக்கு எதிராக எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படும். அதற்கு பெண்கள் உட்பட அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.” - என்றார். (அ)

# வழிப்பிள்ளையார் ஆலயத்தை மீட்க கோரி தலவாக்கலையில் நேற்றுக் கடையடைப்பு

கொழும்பு, மார்ச் 09

தலவாக்கலையில் கடந்த சில வாரங்களாக பேசும் பொருளாக மாறியுள்ள தலவாக்கலை லோகி தோட்ட மல்லிகைபூ சந்தியில் அமைந்துள்ள மிகவும் பிரசித்திப் பெற்ற வழிப்பிள்ளையார் ஆலயத்தினை தலவாக்கலை கதிரேசன் தேவஸ்த்தான பரிபாலன சபையிடம் ஒப்படைக்க வேண்டும் என கோரி நேற்று தலவாக்கலை நகரில் உள்ள அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 200 வருடங்கள் பழமை வாய்ந்த குறித்த ஆலயத்தில் இருந்த 150 வருடத்திற்கு மேல் பழமை வாய்ந்த ஆலமரம் வெட்டப்பட்டதன் காரணமாக மரத்தின் கிளைகள் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியர் மீது விழுந்து அவர் மரணம் அடைந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அதிகாரிகளை அழைத்து விசாரணைகளை நடத்தி தீர்வுகள் பெற்றுக்கொடுக்க வேண்டும் என தெரிவித்திருந்தபோதிலும் அது குறித்து எந்த நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படாத நிலையில் தனி நபர் ஒருவர் மீண்டும் குறித்த ஆலயத்தை அபகரித்து விடுதி ஒன்றினை அடைக்க முற்படுவதகவும் இதனால் இப்பிரதேசத்தில் உள்ள மிகவும் பழமைமை வாய்ந்த ஆலயம் அழியக்கூடிய அபாயம் காணப்படுவதனாலும், குறித்த ஆலமரத்தின் கிளைகள் தொடர்ந்து முறிந்து வீழ்வதனால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், மரணித்த ஆசிரியர் குடும்பத்திற்கு இதுவரை எவ்வித நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுமே குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த போராட்டத்தின் போது பதாதைகளை ஏந்தி, கைகளில் கறுப்பு பட்டிகளை அணிந்து தமது எதிர்ப்பினை போராட்டக்காரர்கள் வெளிப்படுத்தினர்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி ,பிரதமர் மற்றும் மலையக அரசியல் தலைவர்களுக்கு மகஜர் ஒன்றும் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் மதகுருமார்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

## ரஷ்யா, வடகொரியா, சீனா ஆகியன இலங்கைக்கு ஆதரவாக களமிறங்கின

கொழும்பு, மார்ச் 09

உக்ரைன் மீதான படையெடுப்பு தொடர்பாக தடைகளை எதிர்கொண்டுள்ள ரஷ்யாவும் பெலரஸும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு சாதகமாக கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

இலங்கை மனித உரிமைகள், நல்லிணக்க நடவடிக்கைகளில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் நேற்று முன்தினம் பேசிய ரஷ்யா, அதிகமாக தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறியுள்ளது.

இதேவேளை உறுப்பு நாடுகளை நோக்கி மேற்குலகின் அரசியல் உத்திகளை நடைமுறைப்படுத்த ஒரு கட்டுப்படுத்தப்பட்ட பொறிமுறையாக ஐ.நா. மாறுவதாக பெலாரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இதனை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட இலங்கை மற்றும் பெலாரஸ் தொடர்பான அறிக்கைகள் காட்டுவதாகவும் அது தெரிவித்துள்ளது.

அத்தோடு போருக்கு பிந்திய இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க முயற்சிகளை தாம் பாராட்டுவதாகவும் பெலாரஸ் அறிவித்துள்ளது.

இதேவேளை, பல சவால்களுக்கு மத்தியிலும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நேர்மையான முயற்சிகளை பாராட்டுவதாக வடகொரியா தெரிவித்துள்ளது. இதேநேரம் மனித உரிமைகள் பிரச்னைகளை அரசிய லாக்குவதையும், மனித உரிமைகள் என்ற சாக்குப்போக் கில் மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதை யும் தாம் எப்போதும் எதிர்ப்பதாக சீனா தெரிவித்துள்ளது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-அயன்,இனிமேல் இப்படித்தான் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**

7.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு